


# அமரர் நாகமணி சிந்தாமணி

அவர்களின் ஞாபகார்த்த

# நினைவு வெளியீடு

21.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் – உடுவிலைப் பிறப்பிடமாகவும்
திருநெல்வேலி – மணல்தறை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி நாகமணி சிந்தாமணி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு

21.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த

அன்பு அன்னைக்கு இந்நூல்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மண்ணகம்
18.06.1925

விண்ணகம்
19.02.2014

# அமரர்
# நாகமணி சிந்தாமணி
## அவர்களின் நினைவாக 21.03.2014

திதி வெண்பா

ஆண்டு விஜயதனி லானதொரு மாசியிலே
பூண்ட அபரபக்க சதுர்த்திதிதி வேண்டுமருள்
தேடியடைந்த திருவார் சிந்தாமணி
நாடினாள் ஈசன் கழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## திருமதி சிந்தாமணி நாகமணி

# அவர்களின் வாழ்க்கைத் தடம்

பசுமை நிறைந்த, வயல் செறிந்த மானிப்பாய் உடுவில் எனும் சிறு ஊரில் தமக்கென ஒரு கொள்கையை உருவாக்கி சீரும் சிறப்புமாய் வாழ்ந்தவர்கள் அமரர்களான தாமர் கதிரேசும் அவர் பத்தினி நாகம்மா என்னும் மங்கையும்.

இவர்களின் இல்லறப் பயனாய் அவதரித்த அறுவரில் ஒருவராக **1925**ஆம் ஆண்டு ஆனி மாதம் பதினெட்டாம் நாள் ***(1925. 06. 18)*** தரணியில் தடம் பதித்தார் அமரர் சிந்தாமணி. இப்பெயருக்கு ஏற்றாற் போல இவர் சிரித்த முகமும், கருணை உள்ளமும், வருவோர் போவோரை பசியுடன் போக விடாது, காலம் நேரம் பாராது இன்முகத்துடன் வரவேற்று வயிராற உபசரித்து இயலுமானவரை பணவுதவியும் செய்து வழியனுப்பி வைத்து திருப்தி காண்பதில் மன நிறைவு மிக்கவராக காணப்பட்டார். தம் உறவினர், தம் கணவர் உறவினர் என வேறுபாடுகள் எவையும் இன்றி யாவரையும் ஒரே உறவாக நினைத்து வாழ்ந்தவர்.

மூத்தவர்களான ஒரே ஒரு தமையனார் விசுவலிங்கத்துடனும், தமக்கைமாரான அன்னம்மா, பொன்னம்மா, ராசம்மா, இரத்தினம் ஆகியோருடன் பாசமிகு சகோதரியாக அன்புடன் வாழ்ந்து வந்தார். தனது ஆரம்பமும் இறுதியுமாக உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றுத் தேர்ந்தார். இளமைப் பருவத்தை எய்தியதும் படிப்பைத் தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் ஏற்பட்ட சில இன்னல்களால் சகோதரி அன்னம்மா, அவர் தம் கணவர் செல்லையாவுடன் (திருநெல்வேலி, மணல்தறை ஒழுங்கையில்) வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு குழந்தைச் செல்வம் இன்மையால் இவரையே தம் பிள்ளையாக எண்ணி வளர்த்தும் வந்தனர். பசும் போர்வை போர்த்தாற் போல் எண்ணற்ற வயல்கள் நிறைந்த கிராமமாகவும், சிவந்த மண்ணையும், நல் வளமுள்ள பயிர்கள் செறித்தும், மற்றும் விமான நிலையத்தை அண்டிய பூமியாகிய வயாவிளான் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த கதிரேசு வைரவப் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் அவதரித்த ஆறுபேரில் ஒருவரான நாகமணி என்பவரை **1947**ஆம் ஆண்டில் இல்லறம் என்ற நல்லறத்தில் இணைத்து வைத்ததன் பயனாக நாநிலம் போற்றும் புதல்விகளாக சரஸ்வதி, சறோஜினி, வசந்தகுமாரி மற்றும் இரு புதல்வர் களாக சண்முகானந்தம், வசந்தகுமார் என்போரை பெற்றெ டுத்து பூரிப்புடன் வாழ்ந்து வருகையில் மூத்த மகள் சரஸ் வதியை சொந்தத்தில் இருந்த தம்பு கணநாதனை (மணல்தறை) திருமணம் முடித்து வைத்தார். அதன் பின்னர் இரண்டாவது மகளான சறோஜினியை வேலணை சரவணையைச் சேர்ந்த செல்லையா ஜெயபால சிங்கத்தை மணம் முடித்து வைத்தார். இவ்வாறே வாழ்ந்து வருகையில் **1987**ஆம் ஆண்டு (**1987.10.12**) இந்திய இராணுவத்தின் கொடூர ஆக்கிரமிப்பில் நிகழ்ந்த இராணுவத்தின் துப்பாக்கிச் சூட் டுக்கு இலக்கானார் இவரது கணவர் நாகமணி, ஆறாத்துயரில் ஆழ்ந்திருந்த போதும் மகள், மருமகனின் ஆதரவுடன் நான்காவது மகளான வசந்த குமாரியை பரராஜசிங்கம் உதயகுமாருக்கு (சாவகச்சேரி) மணம் முடித்து வைத்தார். பின்னர் கனிஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரன் வசந்தகுமார் பிரான்சில் வசித்து வந்த சமயம் அவர் விரும்பிய படியே கிருபா இராஜரட்ணம் (கரம்பொன்) என்பவரை மணந்தார். இதன் பின்னரே இறுதியாக தனது சிரேஷ்ட புதல்வனான சண்முகானந்தத்தை தயாநிதி சங்கரப்பிள்ளைக்கு (வேலணை) மணமுடித்து கனடாவில் வாழ்ந்துவர வாழ்த்திவிட்டார். தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் தன்னிடம் ஒவ்வொரு நாளும் வரவேண்டும், தன்னைப் பார்க்க வேண்டும், கதைக்க வேண்டும் என்ற வேண்டுகோளின் படி தொலை பேசியிலும், வெளிநாடுகளில் வசிப்போருடன் 'Skype' இலும் பார்த்துக் கதைத்து தன்னிறைவுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர். திடீரென ஒருமாத காலமாக ஏற்பட்ட சிறுநோய்க்கு உட்பட்டு யாருமே எதிர்பாரா விதமாக திடீரென தனது வாழ்க்கையை **19.02.2014** புதன்கிழமை அன்று காலை **8.45** மணியளவில் இறைவனது திருவடியில் நிறைவுபடுத்திக் கொண்டார்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

**1. தேவாரம்  திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்**

**பண் - சீகாமரம்**  **2ஆம் திருமுறை**

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

**2. திருவாசகம்  மாணிவாசகப் பெருமான்**

**8ஆம் திருமுறை**

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
  பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
  உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
  செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
  எங்கெழுந் தருளுவ தினியே.

**3. திருவிசைப்பா**

**பண் - காந்தாரம்  கருவூர்தேவர்  9ஆம் திருமுறை**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. திருப்பல்லாண்டு சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9ஆம் திருமுறை**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம் சேக்கிழார்பெருமான் 12ஆம் திருமுறை**

ஆதியாய்நடுவு மாகிஅளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிய
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றிபோற்றி

# திங்கட்கிழமை

**1. தேவாரம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்**

**பண் - கொல்லி** **3ஆம் திருமுறை**

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்ப
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. திருவாசகம் மணிவாசகப்பெருமான் 8ஆம் திருமுறை**

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே.

**3. திருவிசைப்பா பூந்துருத்தி நம்பி காடநம்பி**

**பண் - சாளரபாணி 9 ஆம் திருமுறை**

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

**4. திருப்பல்லாண்டு சேந்தனார்**

**பண் - பஞ்சமம் 9 ஆம் திருமுறை**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பெரியபுராணம்** **சேக்கிழார் பெருமான்** **12 ஆம் திருமுறை**

தூயவெண்ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

# செவ்வாய்க்கிழமை

**1. தேவாரம்** **திருநாவுக்கரசு நாயனார்**

**திருவிருத்தம்** **4 ஆம் திருமுறை**

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

**2. திருவாசகம்** **மணிவாசகப் பெருமான்**

**8 ஆம் திருமுறை**

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. திருவிசைப்பா** **பூந்துருத்தி நம்பி காடநம்பி**

**பண் - சாளரபாணி** **9 ஆம் திருமுறை**

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

**4. திருப்பல்லாண்டு** **சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9 ஆம் திருமுறை**

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்
றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்** **சேக்கிழார்**

**12 ஆம் திருமுறை**

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் கிழமை

**1. தேவாரம்** **6 ஆம் திருமுறை**

**திருத்தாண்டகம்** **திருநாவுக்கரசு நாயனார்**

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அகளியற்றார் பிறந்தவா றதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

**2. திருவாசகம்** **மணிவாசகப் பெருமான்**

**8 ஆம் திருமுறை**

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுவதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. திருவிசைப்பா** **சேந்தனார்**

**9 ஆம் திருமுறை**

**பண் - பஞ்சமம்**

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னொடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

**4. திருப்பல்லாண்டு** **சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9 ஆம் திருமுறை**

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்** **சேக்கிழார் பெருமான்**

**12 ஆம் திருமுறை**

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழக்கிழமை

**1. தேவாரம்**

**பண் - கொல்லி** **சுந்தரமூர்த்தி நாயனார்** **7 ஆம் திருமுறை**

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பாய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூரர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
தம்மையே சிவ லோகமாள்வதற்(கு)
யாதுமையுற வில்லையே.

**2. திருவாசகம்** **மணிவாசகப் பெருமான்**

**8 ஆம் திருமுறை**

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

**கருவூர்த்தேவர்**

**பண் - பஞ்சமம்** **9 ஆம் திருமுறை**

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## 4. திருப்பல்லாண்டு

**சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9 ஆம் திருமுறை**

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார் புராணம்** **12 ஆம் திருமுறை**

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
ஞானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தானக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக்
கண்டார்கள்.

# வெள்ளிக்கிழமை

**3. தேவாரம்** **சுந்தரமூர்த்தி நாயனார்**

**பண் - தக்கேசி** **7 ஆம் திருமுறை**

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. திருவாசகம்** **மணிவாசகப் பெருமான்**

**8 ஆம் திருமுறை**

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

**3. திருவிசைப்பா**

**திருவாலியமுதனார்**

**பண் - இந்தளம்** **9 ஆம் திருமுறை**

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. திருப்பல்லாண்டு** **சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9 ஆம் திருமுறை**

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்** **சேக்கிழார் புராணம்** **12 ஆம் திருமுறை**

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்

# சனிக்கிழமை

**1. தேவாரம்** **திருநாவுக்கரசு நாயனார்**

**திருவிருத்தம்** **4 ஆம் திருமுறை**

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும்கிடந் தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. திருவாசகம் மணிவாசகப் பெருமான்**

**8 ஆம் திருமுறை**

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணு வாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

**3. திருவிசைப்பா கண்டராதித்தர்**

**9 ஆம் திருமுறை**

**பண் - பஞ்சமம்**

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர் நின்னோடு
ஒத்தே வாழும்தன்மை யாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்றுவண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.

**4. திருப்பல்லாண்டு சேந்தனார்**

**பண் - பஞ்சமம்**

**9 ஆம் திருமுறை**

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீராட்டுந்
திறங்களு மேசிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம் நெகஊறும்
அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார் புராணம்

**5. பெரியபுராணம்** **12 ஆம் திருமுறை**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார்.

# திருநீற்றுப்பதிகம்

### திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

**பண் - காந்தாரம்** **2 ஆம் திருமுறை**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ள நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயினை தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காரியசித்தி மாலை

**இயற்றியவர்:- காசிபமுனிவர்**



திருச்சிற்றம்பலம்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மயைஆ கமலங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலகு முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உளச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னானும் உயிர்க் குலநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுந்தகைய
வேத முடிவில் நடம்நவிலும் .
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில்தோத் தினம்மும்மைச்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும்எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொரு முறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராக்க மகிமை

**திருநாவுக்கரசு சுவாமிகள்**

**திருத்தாண்டகம்** **6 ஆம் திருமுறை**

எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமுங்க கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டர் தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

**மூவர் முதலிகள் அருளிய**

**நான்கு நமசிவாயத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய**

## நமச்சிவாயத் திருப்பதிகம் 1

திருச்சிற்றம்பலம்

**பண் - காந்தாரபஞ்சமம்** **3 ஆம் திருமுறை**

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்(து)
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே.

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்(து)
அல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே.

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சும் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே.

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன வஞ்செ ழுத்துமே.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன வஞ்செ ழுத்துமே.

கார்வண னான்முகம் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
போவணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் அருளிய

# நமச்சிவாயத் திருப்பதிகம் 2

திருச்சிற்றம்பலம்

பண் - கௌசிகம் 3 ஆம் திருமுறை

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே.

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லா னாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# நமச்சிவாயத் திருப்பதிகம் 3

**பண் - காந்தார பஞ்சமம்** *திருச்சிற்றம்பலம்* **4 ஆம் திருமுறை**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய புலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் நறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினாவுவோ மல்லோம்
அடுக்கிற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெல்லாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்கு வான்நலம்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிலக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினார் உலகினின் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்று ருருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசன்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லால்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# நமச்சிவாயத் திருப்பதிகம் 4

**பண் - பழம் பஞ்சுரம்** திருச்சிற்றம்பலம் **7 ஆம் திருமுறை**

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

இட்டன்றும்மடி ஏத்துவாரிகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலால்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

ஓவுநாளுணர் வழியும்நாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலால்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்புகழ் எம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லைஉந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

அஞ்சினார்க்கரண் ஆதியென்றடி
யேனும்நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள்
நல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

ஏடுவான்இளந் திங்கள்சூடினை
யென்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்பத ரைக்க சைத்த
அழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டன
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விருப்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

செம்பொன்நேர்சடை யாய்திரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினு
சொல்லும்நா நமச்சிவாயவே.

சாரணன்றந்தை எம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாராணன்பிர மன்தொழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்ல துன்பமே.

திருச்சிற்றம்பலம்

## கோளறு திருப்பதிகம்

**பொது** **அடிமை** **பியந்தைக்காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழுபதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்த அன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்



# சிவபுராணம்

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்துஅறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

*சிவபுராணம் முற்றிற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்



**நேரிசை வெண்பா**

**துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்**
**நிட்டையுங் கைகூடும், நிமலர்அருள் கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

*சஷ்டியை நோக்கச் சரவண பவனார்*
*சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்*
*பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை*
*கீதம் பாடக் கிண்கிணி யாட*
*மைய நடஞ்செயும் மயில்வா கனனார்*
*கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து*
*வரவர வேலா யுதனார் வருக!*
*வருக! வருக! மயிலோன் வருக!*
*இந்திரன் முதலா எண்திசை போற்ற*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட் டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**கந்தர் சஷ்டி கவசம் முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் கைவண்ணத்தில்...

காப்பு

அரிகர புத்திரனை ஆனந்தரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோம்
ஐயப்பன் தேவன் கவசமிதனை அனுதினமே
சொல்ல அல்லல்கள் அழியும்
தினம் தினம் துதிக்க திருவருள் கிடைக்கும்
நாடிய பொருளும் நலமே வந்திடுமே

விநாயகர் துதி

அரியின் மருகோனே
ஆறுமுகன் சோதரனே
இனிமைத் தமிழோனே
ஈசனின் பாலகனே
உமையவளின் செந்தேனே
ஊழ்வினை அழிப்பவனே
என்னுயிரும் காப்பவனே
ஏழையை ஆட்கொண்டு
ஐங்கரனே அருள்புரிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேயர் வழிபாடு

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக
ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு
கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவன் அளித்துக் காப்பான்

திருத் தேவாரத்தைத் தினம்
ஓம் படித்திடில் போதும் தோன்றும்
வயம் ஆனந்தமும்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் - நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச், - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை.
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து, முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத், - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

- பட்டினத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 1

# தரணியில் சாதனை படைப்போர் முதலாம் எண்ணுக்குரியவர்கள்

*1, 10, 19, 28* போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

இந்த எண்காரர்கள் கொஞ்சம் பேராசை மிகுந்தவர்களாக இருப்பார்கள். அதிலும் 28ஆம் திகதி பிறந்தவர்களுக்கு அந்த ஆசை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு என்பதைப் போல் இந்த எண்காரர்களுக்கும் கட்டுப்பாடு என்பது பிடிக்காத ஒரு விடயம். எல்லோரிடத்திலும் சிரித்துச் சிரித்துப் பேசுவதனால் அடுத்தவர்களை இவர்கள் எளிதில் கவர்ந்துவிடுவார்கள். இவர்களிடத்தில் நகைச்சுவை உணர்வு அதிகம் இருப்பதால், இவர்கள் இருக்கும் இடத்தில் சிரிப்புக்கு பஞ்சமே இருக்காது.

இந்த எண்காரர்கள் ஒருவர்மீது பிரியம் வைத்து விட்டால், அவர்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். அதேநேரம், இவர்கள் கொஞ்சம் கஞ்சத்தனம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் இளகிய மனம் படைத்தவர்களாக இருந்தாலும் தங்களிடம் பகைத்துக் கொண்டவர்களிடம் மண்டியிட போகமாட்டார்கள். இதனால் இவர்களுக்கு வெளியில் தெரியாத எதிரிகள் இருந்தாலும் அதனால் இவர்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது.

ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி இவர்களிடம் எளிதில் மயங்கிவிடுவார்கள். அதேபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களும் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அவர்களை வசியப்படுத்த தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

இந்த எண்காரர்களைப் பற்றிய முக்கிய ஒரு விஷயம் என்னவென்றால் இவர்களில் சிலருக்கு குழந்தைப் பாக்கியம் இருக்காது. அப்படியும் இல்லையென்றால் ஆண் வாரிசு இருக்காது. அப்படியே இருந்தாலும் அந்தப் பிள்ளைகளால் இவர்களுக்கு எந்தவிதமான பலனும் இருக்காது. இந்த எண்காரர்களைப் பொறுத்தவரை, இவர்கள் என்னதான் வசதியோடு வாழ்ந்தாலும்,

இவர்களின் வாழ்வில் ஏதாவது ஒரு குறை இருந்து கொண்டேதான் இருக்கும். இந்த எண்காரர்கள் எல்லோரிடத்திலும் இருக்கும் தவிர்க்க முடியாத ஒரு குறைபாடு இதுவாகும். நீங்களும் இந்த எண்காரர்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் நான் சொல்வதில் இருக்கும் யதார்த்தத்தை நீங்களும் புரிந்துகொள்ளலாம்.

இவர்களுக்கு திடீர் திடீர் என்று கடுமையான கோபம் வருவதால் இவர்களுக்கு வர இருக்கின்ற நல்ல வாய்ப்புகளை இழந்து விடுவார்கள். இதைத் தவிர்த்துக் கொண்டால் இவர்கள் வாழ்வில் நல்ல நிலைக்கு வருவார்கள்.

இவர்கள் மிகவும் நேர்மையானவர்களாக இருப்பார் கள். குறுக்கு வழியில் போவது என்பது இவர்களுக்குப் பிடிக்காது. அதேபோல், இவர்களை எவரும் அடிபணிய வைக்கமுடியாது. அதேநேரம் இவர்களுக்கு தலைக்கனம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

காதல் துறையில் அநேகமாக இவர்கள் வெற்றிநடை போடுகிறவர்களாகவே இருப்பார்கள். காதலித்த ஆணையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பெண்ணையோ திருமணம் செய்து கொள்வார்கள். அப்படியும் இல்லையென்றால் எண்கள் பகை இல்லாமல் இருந்தால் திருமணம் செய்து கொண்டவரோடு பிரியமாக இருப்பார்கள்.

விதி எண் சக்திமிக்கதாக இருந்தால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். இல்லையென்றால் தடம்புரண்டு செல்லும். இவர்களுக்கு இரக்க குணம் அதிகம் என்பதனால் விரை விலேயே உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள்.

இந்த எண்காரர்களில் சிலர் சந்தர்ப்பவாதிகளாகவும் இருப்பார்கள். அந்தந்த சந்தர்ப்பங்களில் யாருடன் சேர்ந்துகொண்டால் தங்கள் வண்டி ஓடும் என்பதைப் புரிந்துகொண்டு கட்சியை மாற்றிக்கொள்வதில் இவர்களுக்கு நிகர் இவர்கள்தான். வெளிப்படையாகவே சொல்வதாக இருந்தால் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"வதில் அசகாயசூரர்கள்.

யார் பக்கத்தில் இவர்கள் இருக்கிறார்களோ அவர் களுக்கு வக்காலத்து வாங்கித்தான் இவர்கள் பேசவார்கள்.

பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லோரும் அநேகமாக இந்த எண்காரர்கள்தான் இருப்பார்கள். அதே போல், அடுத்தவர்களை புகழ்ந்துபேசி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளும் கலையில் இவர்களை எவரும் மிஞ்சமுடியாது. **19, 28, 27, 55** போன்ற வயதுகளில் இவர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும்.

இவர்களிடம் இருக்கும் சில நல்ல பண்புகளினால் நிறையப் பேர் இவர்களைத்தேடி வருவார்கள். இதனால் இவர்களுக்கே நிறைய நண்பர்கள் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக கௌரவம் பார்க்கும் இவர்கள் எந்தப் பெரிய பதவிகளில் இருந்தாலும் தனது மேலதிகாரி கௌரவக் குறைவாக நடத்துகிறார் என்று உணர்ந்தால் அந்தப் பதவியை உடனே தூக்கி எறிந்துவிட்டுப் போய் விடுவார்கள். சிலருக்கு பள்ளிப்படிப்பு அதிகம் இல்லாவிட்டாலும் அனுபவ அறிவைக் கொண்டு எல்லோரையும் மிஞ்சும் அளவுக்கு செயல்படுவார்கள்.

இந்த எண்காரர்கள், கலைஞர்கள், வைத்தியர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள் போன்ற பல விதமான தொழில்களிலும் சிறந்து விளங்குவார்கள். இவர்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடக்க வேண்டும். விதி எண்ணில் **4**ஆம் எண்ணோ **6**ஆம் எண்ணோ பிறந்த திகதியில் ஒரே எண்கள் இரண்டோ இருந்தால் முப்பது வயதிற்குப் பிறகுதான் திருமணம் நடக்கும்.

இந்த எண்காரர்கள் தனிமையில் இருப்பது என்பது அபூர்வமாகத்தான் இருக்கும். இவர்களைச் சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் இருக்கும்.

எதையுமே சுற்றிவளைத்துப் பேசுவது என்பது இவர்களிடம் இருக்காது. நேரடியாகவே பேசிவிடுவார்கள். அது புரியும்படியும் இருக்கும்.

இந்த எண்காரர்கள் **1**ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது. அதேபோல், இவர்களுக்கு ஜென்மப் பகையான **7**ஆம் எண்காரர்களையும் திருமணம் செய்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு சிறந்த எண் **3**, அடுத்தபடியாக **4**, **8**, **5** போன்ற எண்காரர்களும் ஒத்துப் போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு எண் 1, விதி எண்ணும் 1 என்று இருந்தால் 1ஆம் எண்ணில் இவர்கள் பெயர் வைத்துக்கொள்ளவே கூடாது. பிறப்பு எண், வளர்ப்பு எண், பொறுப்பு எண், விதி எண்ணுக்கு பகை இல்லாத எண்ணில் பெயர் அமைத்துக் கொள்வதுதான் சிறப்பு.

பெயர் எண், விதி எண்ணுக்கு ஏற்ற விதத்தில் நிறங்களையும் அதிர்ஷ்ட கல்லையும் தெரிவு செய்துகொள்ள வேண்டும்.

1, 10, 28, 19 போன்ற திகதிகளில் பிறந்தவர்களுக்கும் சேர்த்தே இங்கு பலன் சொல்லப்பட்டிருக்கிறது. இது பெண்களுக்கும் பொருத்தமாகவே இருக்கும்.

19ஆம் திகதி பிறந்தவர்கள் காதல் விவகாரங்களில் அதிக ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். 'மன்மத ராஜா'க்களும் 'மன்மதராணி'களும் இந்தத் திகதியில் பிறந்தவர்கள்தான். 28ஆம் கிததி பிறந்தவர்களின் வாழ்க்கை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கும். எதிர்பாராத பிரச்சினைகளுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டிவரும். 1ஆம் எண்காரர்கள் எதிலும் Number One ஆக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். எவரிடமும் அடிமையாக வேலை செய்ய விரும்பமாட்டார்கள். 10ஆம் திகதி பிறந்தவர்களுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். சில சமயங்களில் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய வெற்றிகள் பிறருக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

10 காரியங்கள் நடந்தால் அதில் 4 காரியங்கள் பிறருக்குத்தான் பயன் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 2

# வீண்வம்பை விலைக்கு வாங்கி விபரிதத்தில் மாட்டிக் கொள்வோம்

ஒவ்வொரு மாதத்திலும் வரும் **2, 11, 20, 29** போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

**2**ஆம் எண் என்பது சந்திரனின் ஆதிக்கத்தில் உள்ள எண். இந்தச் சந்திரனுக்கு எப்போதும் நிலையான, முழுமை யான தோற்றம் இருந்ததில்லை.

அதாவது;

வளர்பிறை, தேய்பிறை, பௌர்ணமி, அமாவாசை என்று அடிக்கடி அதன் தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

இதேபோல் தான் இந்த **2**ஆம் எண் காரர்களின் வாழ்க்கையும் அமையும். அதாவது இவர்களிடம் சீரான ஒரு கொள்கை இருக்காது. காலையில் ஒரு கருத்தைச் சொன்னால் மாலையில் வேறு ஒரு கருத்தைச் சொல்வார்கள். இன்று ஒரு காரியத்தைச் செய்வதாக அறிவித்துவிட்டு நாளை வேறு ஒரு காரியத்தில் இறங்கி விடுவார்கள்.

கற்பனை உலகில் அதிகமாகவே வாழ்ந்து கொண்டி ருக்கும் இவர்களிடம், சுயமாக சிந்தித்து செயற்படும் சக்தி குறைவாகவே இருக்கும். அதாவது சூரியனின் ஒளியைப் பெற்று சந்திரன் இயங்குவது போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு புதிய, புதிய யுக்திகள் எல்லாம் வரும். ஆனால் அதைச் செயல்வடிவில் கொண்டு வர இவர்கள் முயற்சி செய்தால், அதில் இவர்களுக்கு தோல்வி தான் ஏற்படும். இதனால் இவர்கள் தங்கள் ஆலோசனைகளை நம்பிக்கையான ஒருவருக்கு வழங்கி அவர் மூலமாக இவர் நன்மை பெறலாம்.

இவர்களில் சிலர் சமூகத்தில் உயர்வான பதவிகளில் இருக்கும் அதேநேரம். பொய் பேசுவதிலும் வல்லவராகவே இருப்பார்கள். சந்தேகப் பிராணிகளான இவர்கள் பணத்தைச் செலவழிப்பதிலும் கஞ்சத்தன்மை காட்டுவார்கள்.

இந்த எண்காரர்களின் தாம்பத்திய வாழ்க்கை திருப்திகர மாக அமையாது. சிற்றின்பத்தில் அதிக நாட்டமுடை யவர்களான இவர்களில் சிலர் தம் உணர்ச்சிக்கு அடிமையாகி வாழ்க்கைத் துணையின் சொல்லுக்கு மாறாக நடப்பார்கள். இவ்வெண்ணின் ஆதிக்கத்தில் நம்பிக்கை வைத்த ஒரு சிலர் மாத்திரமே தாம்பத்திய வாழ்வில் சுகம் காண்பார்கள். மற்றவர்கள் எல்லாம் தீராத சண்டை போட்டுக் கொண்டு தான் வாழ்வார்கள்.

வக்கீல்களைப் போல் வாதத்திறமை கொண்ட இவர் களிடம் யாரும் பேசி வெற்றிபெற முடியாது. பறக்கின்ற காக்காய்க்குக்கூட கதை சொல்லும் திறமையுடையவர்காளக இருப்பார்கள். இவர்களக்கு காதலில் தோல்வி தான் ஏற்படும். அபூர்வமாகத்தான் காதல் திருமணம் நடக்கம். இவர்களிடம் இருக்கும் மிகப்பெரிய குறை என்று சொன்னால் அடுத்தவர் கள் சொல்வதைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டார்கள். தங்களிடம் எவ்வளவுதான் குறைகள் இருந்தாலும் அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் மறைத்துக்கொண்டு அடுத்தவர்களின் குறைகளைக் கண்டு பிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இதனால் இவர்களுக்கு பலவிதமான பிரச்சினைகள் ஏற்படும்.

எந்த ஒரு விடயத்திலும் இவர்கள் விட்டுக் கொடுத்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். வீண் விவாதங்களுக்குப் போகாமல் தவிர்த்துக் கொள்வதும் நல்லது.

பலரும் கூடியுள்ள ஓர் இடத்தில் இருந்து யாராவது அதிகம் சத்தம்போட்டு பேசும் குரல் கேட்டால் அவர்கள் **2**ஆம் எண்காரர்களாகத்தான் இருப்பார்கள். இவர்களுக்கு ஜென்மப் பகையான எண்காரர்கள் **9**ஆம் எண்காரர்கள் தான். ***9, 18, 27*** போன்ற திகதிகளில் பிறந்தவர்களுடன் இவர்கள் பழகாமல் இருப்பது நன்மை தரும். முக்கியமாக இந்தத் திகதிகளில் பிறந்தவர்களைத் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதும் நன்று.

அடுத்து வரும் பகையான எண் **6**. ஆனால் **9**ஆம் எண் காரர்களைப் போல இந்த எண் ஜென்மப் பகையான எண் அல்ல. இருந்தாலும் இந்த எண்காரர்களுடனும் அவ்வளவு நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது.

***1, 5, 7*** போன்ற எண்கள் இவர்களுக்கு மிகவும் நட்பான எண்கள். அதிலும் **7**ஆம் எண் தான் இவர்களுக்கு மிகவும் நன்மை செய்யும் எண்ணாக இருக்கும். இந்த எண்காரர்கள் **7**ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்வது தான் சிறப்பு.

வளர்ப்பு எண், பொறுப்பு எண் மற்றும் விதி எண்களில் எண் **7** வராவிட்டால் இவர்கள் தங்களின் பெயரை எண் ***1***இல் வரும்படி அமைத்துக் கொள்வது சிறப்பாகும். அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது போனால் 5ஆம் எண்ணில் பெயரை வைத்துக் கொள்ளலாம்.

2ஆம் எண்காரர்களைப் பற்றி அடுத்து நான் சொல்லப் போகும் விடயம்தான் மிகவும் தலையாயது. இதைப்படித்து விட்டு நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் பெயர்களை அதிர்ஷ்டமான எண்ணுக்கு மாற்றிக் கொள்வதன் மூலம் அதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

2ஆம் எண்காரர்கள் சமூகத்தில் நல்ல புகழோடு இருந்தாலும் அநேகமானவர்களுக்கு விபத்து மரணம் தான் ஏற்படும். அப்படி அவர்கள் அதிலிருந்து தப்பினால் அங்கவீனம் ஏற்படும். அதாவது உடலில் உள்ள உறுப்புகளில் ஏதாவது ஒன்று உபாதைக்குள்ளாகும்.

பேச்சத் திறமைகளில் வல்லவர்களான இவர்கள், இனிக்க இனிக்க பேசி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். தங்களது பகைவர்களைக் கூட நண்பர் களாக்கிக் கொள்ளும் பேச்சுத் திறமை இவர்களிடம் உண்டு.

இந்த எண்காரர்களிடம் இருக்கும் முக்கியமான ஓர் அம்சம் என்ன தெரியுமா?

எவரையும் கிண்டல் செய்து பேசுவதில் இவர்களுக்கு அலாதியான பிரியம் இருக்கும். அதேபோல் அடுத்தவர் களிடம் குறைகண்டு பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர் களாக இருப்பார்கள். இன்னும் கொஞ்சம் உடைத்துச் சொல்வதாக இருந்தால் பறக்கின்ற காக்காயைக் கூட இவர்கள் விட்டு வைக்கமாட்டார்கள். அதில் கூட ஒரு குறை இருப்பதாக இவர்கள் சொல்லுவார்கள். இவர்கள் என்னதான் கலகலப்பாகப் பேசினாலும் இவர்களின் உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாகத் தெரியாத ஒரு துயரம் இருந்துகொண்டே இருக்கும்.

சாந்தமான இயல்பைக் கொண்ட இவர்கள் சிந்தனை சக்தியும் கலை உள்ளமும் கொண்டவர்களாக இருப்பார்கள். அதேநேரம், கற்பனை உலகில் தான் அதிக நேரம் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் செய்கின்ற காரியங் களில் விரைவோ, மன உறுதியோ இருக்காது. இவர்களது எண்ணங்களும் செயல்களும் உடலை அதிகமாகச் சார்ந்திருக் காமல் மனதையே சார்ந்திருக்கும்.

இவர்களுக்கு எவ்வளவுதான் கஷ்டம் வந்தாலும் அடுத்தவர்களிடம் அதைக் காட்டிக் கொள்ளமாட்டார்கள். அப்படிச் சொல்வதை ஒரு கௌரவப் பிரச்சினையாகவே கருதுவார்கள். அதேபோல், முற்றிலும் குணமாகாத ஏதோ ஒரு நோயினால் துன்பப்படுவார்கள். இருந்தாலும் அந்தநோயினால் அவர்களுக்கு அவ்வளவு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

உடன் பிறந்தவர்களுக்கு நிறையவே உதவிகளைச் செய்யும் இவர்கள் உயர்வான பல நல்ல விஷயங்களைக் கேட்பதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பார்கள்.

இந்த எண்காரர்கள் ஒரு கலையையோ, தொழிலையோ கற்றுக் கொள்ள விரும்பினால் விரைவிலேயே அதில் தேர்ச்சியும் பெற்று விடுவார்கள்.

தேவையற்ற செலவுகள் எதையுமே இவர்கள் செய்யமாட்டார்கள். ஆயிரம் ரூபாய் கிடைப்பதாக இருந் தால்தான் நூறு ரூபாயைச் செலவு செய்வார்கள். கஞ்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனத்தில் இவர்களை மிஞ்சக்கூடியவர்கள் எவரும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இவர்கள் வாழ்வில் ஒரே தொழிலை மட்டுமே நம்பி இருக்கமாட்டார்கள். அதேபோல் ஒரு கலையில் மட்டுமே வல்லவர்களாக இல்லாமல் பல கலைகளில் வல்லவர்களாக இருப்பார்கள். இதனால் பல வழிகளிலும் இவர்களுக்கு வருவாய் ஊற்றுகள் அதிகரிக்கும்.

புருவம் சற்று உயர்வாக இருக்கும். இவர்களது உடலின் வலப்பக்கத்தில் மச்சம் இருக்கும்.

இவர்களிடம் இருக்கும் மிகப்பெரிய பலவீனம் என்னவென்றால், எந்தக் காரியத்தையும் உடனே செய்யாமல் தள்ளிப்போட்டுக் கொண்டே போவார்கள். இதனால் அடுத்தவர்களின் வெறுப்புக்கு இவர்கள் ஆளாக நேரிடும். முன்கோபம் அதிகமாக உள்ள இவர்கள் உடலுக்கு சுமை தரும் வேலைகள் எதையும் செய்ய விரும்பமாட்டார்கள். சுகவாசிகளாக வாழத்தான் இவர்கள் அதிகம் விரும்புவார்கள். இதனால், இவர்களில் சிலருக்கு பெண்களிடத்தில் ஒருவித சபலம் இருந்துகொண்டே இருக்கும். குறிப்பாக, திருமண மான பெண்களோடு தொடர்புகள் இருக்கும். பெண்கள் மட்டும் சாமியார்களாக இருக்கமாட்டார்கள். ஆண்களோடு தொடர்பு வைத்திருப்பார்கள். இதனால் இவர்களின் இல்லற வாழ்க்கையிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

அடிக்கடி எதைப்பற்றியாவது மனக்கோட்டை கட்டிக் கொண்டே இருப்பார்கள். சந்தேகம் என்பது இவர்களின் உடன் பிறந்த குணமாகவே இருக்கும். பலருக்கு எதிர்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் சம்பவங்களை எடுத்துக் கூறுவார்கள். ஆனால் தங்களது சொந்த வாழ்வைப்பற்றி அறிய முடியாதவர்களாக இருப்பார்கள்.

வியாபார விஷயத்திலும் இப்படித்தான். இவர்கள் சொல்லுகின்ற ஆலோசனைகளைக் கேட்டு ஒருவர் நடந்தால், அவர் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வருவார். ஆனால் அதே ஆலோசனையை இவர் பின்பற்றினால் தோல்வியைத் தொட்டில் கட்டி அமர்ந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை தான் உருவாகும். அப்படி ஒரு ராசி இந்த எண்காரர்களுக்கு.

வாழ்வில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்த்துப் போராடும் சக்தி இவர்களுக்குக் குறைவாகவே இருக்கும். இதனால் இவர்களின் மனம் வெகுவாகப் பாதிக்கப்படுவதால் சிலசமயம் மனநோயாளியாகக்கூட மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

இவர்களில் ஒரு சிலர் மிகவும் புகழ் பெற்றவர்களாக இருப்பார்கள். அதேபோல் மற்றவர்களும் இவர்களைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்கள்.

தன்னுடையதாக இல்லாவிட்டாலும் வேறு யாருடைய பணமாவது இவர்களிடம் இருந்துகொண்டே இருக்கும். சந்திரன் எப்படி சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று பிரகாசிக்கிறதோ அதேபோல்தான் இந்த எண்காரர்களும் பிறர் உதவியின்றி இவர்கள் முன்னுக்கு வரவே முடியாது. இவர்களிடம் சோம்பேறித்தனம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு காரியத்திற்கு வரமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் அந்த காரியத்தை முடிக்கும் வரை உண்ணவோ உறங்கவோ மாட்டார்கள். அதேபோல், சேர்ந்து போய் படுத்துவிட்டால் அப்புறம் அவர்களை எழுப்புவது என்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியம்.

தெய்வ நம்பிக்கை மிக்க காந்திஜியும் தன் நம்பிக்கை தளராத ஹிட்லரும் இந்த எண்காரர்கள்தான் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

எந்த ஒரு விஷயத்திற்கும் இவர்கள் அஞ்சவே மாட்டார் கள். இவர்களைவிட பலசாலிகளாக இருப்பவர்களிடம் கூட இவர்களுக்குப் பயம்வராது. இந்த எண்காரர்கள் இறை பக்தியை அதிகரித்து கொள்வார்களேயானால் இவர்களுக்கு வருகின்ற துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகிவிடும்.

அதிகமாகப் பொய் பேசுகிறவர்கள் யார் என்று ஒரு போட்டி வைத்தால் அதில் இந்த எண்காரர்கள்தான் முதலாவது இடத்தைப் பிடிப்பார்கள். தற்பெருமை பேசிக் கொள்வதில் அதிக ஆர்வம் கொண்ட இவர்கள் ஒரு சிறிய காரியத்தைக்கூட பெரிதுபடுத்திப் பார்த்து அதனால் வேதனைப்படும் தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள்.

இதனால் இவர்களின் உள்மனம் எப்போது பார்த் தாலும் ஏதாவது ஒரு ஏக்கத்திற்கு அல்லது சஞ்சலத்திற்கு உள்ளாகி தவித்துக்கொண்டிருக்கும்.

இவர்களிடம் இருக்கும் மிகப்பெரிய பலவீனம் எது என்று கேட்டால் அடுத்தவர்கள் சொல்லும் எந்த ஒரு விஷயத்தையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டார்கள். தங்கள் விருப்பப்படிதான் எல்லா காரியங்களையும் செய்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் தோல்விதான் இவர் களுக்கு பரிசாகக் கிடைக்கும்.

இந்த அவசரக் குணத்தை மட்டும் மாற்றிக் கொண்டால், இவர்கள் வாழ்வில் நல்ல நிலைக்கு வரலாம்.

எவரையும் தங்கள் பேச்சத்திறமையால் கவர்ந்துவிடும் இவர்களிடம் தலைக்கனம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இவர்களிடம் யாராவது பேசுவதற்கு மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான். அறு அறு என்று அவர்களை அறுத்தெடுக்கும் அறுவை மன்னர்களாக இவர்கள் இருப்பார்கள். தேபோல், அடுத்தவர்களைப் பற்றி 'பெட்டிசன்' அடிக்கும் கலையிலும் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருப்பதைப்போல், 'கோள் மூட்டி' விடுவதிலும் வல்லவர் களாக இருப்பார்கள். இதனால், இந்த எண்காரர்களுடன் பழகும்போது மிகவும் ஜாக்கிரதையாகப் பழகவேண்டும். யாரை எந்த இடத்தில் வெட்டலாம் என்று கைகளில் 'பிளேட்'டுடன் அலைந்து கொண்டிருப்பார்கள்.

இவர்கள் தங்கள் சொந்த விடயங்களைவிட பிறருடைய விஷயங்களில் தலையிடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் களாக இருப்பார்கள். அடுத்தவர்களுடைய குற்றங்களைக் கண்டுபிடித்து அதைப் பகிரங்கப்படுத்தி மகிழ்வார்கள். பிறர் விவகாரங்களில் தலையிடாமல் தங்களது முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினால் விரைவில் முன்னேறலாம்.

காதல் கல்யாணம் என்பது இவர்களுக்கு அபூர்வமானத் தான் நடக்கும். பெரும்பாலும் இவர்களுக்கு காதலில் தோல்விதான் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்களைக் கொண்ட கணவன் - மனைவியருக் கிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் இருந்து கொண்டே இருக்கும். இதனால் இவர்களின் மணவாழ்விலும் சிக்கல்கள் ஏற்பட அது வழி அமைத்துவிடும். இவர்களக்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், 2ஆம் எண்காரரான நீங்கள் தயவு செய்து இன்னுமொரு 2ஆம் எண்காரரைத் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். அந்த 2ஆம் எண் பிறந்த எண்ணில் இருந்தாலும் சரி விதி எண்ணில் இருந்தாலும் சரியே. நான் சொல்வது பொய் என்றால் அப்படித் திருமணம் செய்து கொண்ட தம்பதியரைக் கேட்டுப் பார்த்தால், அவர்கள் தலையில் அடித்துக் கொண்டு சொல்லும் கதைகள் 'சோகம்' நிறைந்த 'சுவாரஸ்ய'மானதாகவே இருக்கும்.

இந்த எண்காரர்கள் குறிப்பாக வாகனங்கள் ஓட்டும் போதோ பாதையில் நடந்து செல்லும் போதோ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். காரணம் விபத்துகள் இவர்களுக்கு விருந்து வைக்கக் காத்திருப்பதுதான்.

அப்படி திருமணம் செய்து கொண்ட ஒரே எண் காரர்கள் விமோசனம் அடைதவற்கு வழியே இல்லையா?

ஏன் இல்லை, அதற்குத்தான் நவீன எண் ஜோதிடம் வழிகாட்டுகிறதே. அவர்கள் இருவரும் தங்களுடைய எண்ணுக்கு ஏற்ப அதிர்ஷ்டமாகப் பெயர்களை மாற்றிக் கொண்டு அட்டவணைப்படி எழுதி வந்தால், அதிர்ஷ்ட தேவதை அரவணைத்துக் கொள்வாள்

இந்த எண்காரர்கள் பசு வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை வைத்து நடத்துதல், திரவமான மருந்து வகைகள், அழகு சாதனங்கள், தைலங்கள், வர்ணச் சாயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை விற்பனை செய்வதன் மூலம் இவர்கள் நிறையவே இலாபம் பெறலாம். இந்த எண்காரர்களிடம் நிறையவே ஆகாஷண சக்தி இருப்பதால் இவர்களிடம் பொருள் வாங்க வருகிறார்கள். வெறுங் கையுடன் போகவே மாட்டார்கள்.

இவர்கள் இருண்ட நிறங்கள் எல்லாவற்றையும் குறிப்பாக, கறுப்பு, கெட்டியான சிவப்பு நிறங்களைத் தவிர்த்துக் கொள்வது சிறப்பு. இந்த எண்காரர்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட உறவினருக்கும் இந்த விஷயத்தில் ஆண் - பெண் என்ற பேதமில்லை.

இந்த எண்காரர்களைப் பற்றி எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,

"நான் ஏகபத்தினி விரதன்", "நான் படிதாண்டா பத்தினி" என்று மார்தட்டிச் சொல்லக்கூடிய துணிவு இந்த எண்காரர்களுக்கு இருப்பது அபூர்வம் என்றுதான் சொல்லவேண்டும்.

**2**ஆம் எண்காரர்களுக்கு நீரிழிவு நோய், ஜீரணக் கோளாறுகள் போன்றவை ஏற்பட்டு, அதனால் விழிகளில் கோளாறு ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. இதற்குத் தலையாய காரணமாக அமைவது சோம்பலும், உடல் உழைப்பின்றியும் இருப்பதுதான். தினமும் சுறுசுறுப்பாக இயங்கி வந்தால் இவற்றை எல்லாமே தவிர்த்துக் கொள்ளலாம்.

இவர்களின் உடலுக்கு நீரின் தேவை அதிகமாகவே இருக்கும். இதனால் நீரை அதிகமாக அருந்தி வரவேண்டும். அதேநேரம், முருங்கைக் கீரையும், வல்லாரையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்கள் எக்காரணம் கொண்டும் 9ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அது பிறந்த எண்ணில் இருந்தாலும் சரி, விதி எண்ணில் இருந்தாலும் சரியே.

இந்த எண்காரர்களைப் பற்றி நவீன எண்ஜோதிட முறையில் மட்டுமே இருக்கக் கூடிய ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்லிவிட்டு, அவர்களைப் பற்றிய ஆய்வை முடித்துக் கொள்வோம்.

இவர்களுடைய பிறந்த திகதிகளில் ஒரு 2ஆம் எண் மட்டும் இருந்தால் இவர்கள் கல்வியில் "Average Student" ஆகத்தான் இருப்பார்கள். அதாவது கல்வியில் ஓரளவு தான் இவர்களால் பிரகாசிக்க முடியும்.

ஒருவருடைய பிறந்த திகதியில் இரண்டு இடங்களில் எண் 2 வந்தால், கல்வியை முழுமையாக முடிக்க முடியாமல் இடையிலேயே விடும்படியான சூழ்நிலைகள் உருவாகும். இதனால் "Professional Life" இலும், அதாவது இவர்களது சொந்த வாழ்விலும் நிலையற்ற வேலை, தொழிலில் எவ்வளவுதான் உழைத்தாலும் இலாபம் என்பதையே பார்க்க முடியாமல் போகும். இறுதியில் மிஞ்சி இருப்பது உழைப்பு மட்டும்தான்.

அதேபோல் ஒருவருடைய பிறந்த திகதியில் மூன்று இடங்களில் எண் 2 வந்தால் கேட்கவே வேண்டாம். நிம்மதியற்ற, நிலையற்ற வாழ்க்கை தொடரும்.

இதற்குக் காரணம்,

2ஆம் எண் என்பது "Dependent" என்பது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவர்கள் நவீன எண்ஜோதிட முறைப்படி தங்களது பெயரை அதிர்ஷ்ட எண்ணுக்கு மாற்றிக் கொண்டு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு எனது வாழ்த்துக்கள்.

இந்த எண்ணில் பிறந்தவர்களின் நான் சொன்னபடி விபத்துக்குள்ளானவர்களின் ஒரு சிலரின் பட்டியல் ஒன்றைத் தருகின்றேன். இவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள் என்பதனால் நான் சொல்வதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்று நீங்களும் புரிந்து கொள்ளலாம்.

மகாத்மா காந்தி *(02.10.1869)*. கொலை செய்யப் பட்டார்.

ஹிட்லர் *(20.04.1889)*. தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

ராஜீவ் காந்தி *(20.08.1944)*. வெடிகுண்டு விபத்தில் இறந்துபோனார்.

சில்க் சுமிதா *(02.12.1960)*. தற்கொலை செய்து கொண்டார். அடுத்ததாக இலங்கையில் உள்ள சில பிரபலங்களைப் பார்ப்போம்.

சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க *(29.06.1945)*. முன்னாள் ஜனாதிபதி. குண்டு விபத்தில் உயிர் தப்பினாலும் விழிகளில் ஒன்றை இழந்தார்.

நடிகர் ஸ்ரீதர் பிச்சையப்பா, இவரும் **2**ஆம் எண்காரரர் தான். கல்முனையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் உயிர் தப்பினார். ஆனால் கண்களில் ஒன்றை இழக்க நேரிட்டது.

நடிகர் விஜயராஜா, இவரும் **2**ஆம் எண்காரர்தான். விபத்தில் பஸ் கவிழ்ந்த போது பஸ்ஸில் இருந்தவர்களில் இவர் மட்டுமே இறந்து போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர் சிவராம் (*11.08.1959*). இவர் கொலைசெய்யப்பட்ட திகதியும் 2இல்தான் வருகிறது. *29.04.2006* அது மாத்திரமல்ல இவரது பெயர் கூட இவரது பிறந்த எண்ணுக்கும் ஜென்மப் பகையான 9ஆம் எண்ணில் அமைந்திருக்கிறது.

Sivaram = $3+1+6+1+2+1+4=18=1+8+9$

என்ன பார்த்தீர்களா?

இந்த மாதிரியான நிறையப் பேரின் பட்டியல் ஒன்று என்னிடம் இருக்கிறது. ஆனால்,

அவர்கள் அந்தளவிற்கு புகழ் பெற்றவர்கள் அல்ல என்பதனால் இங்கே எழுதவில்லை. அவர்களைப் பற்றிச் சொன்னாலும் உங்களுக்குத் தெரியாது.

2ஆம் எண்ணில் பிறந்தவர்கள் கண்டிப்பாக அதிர்ஷ்ட மான எண்ணுக்கு உங்கள் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும். பெயரை மாற்றிக் கொள்ளும் போது அதில் Magnetic Power என்று சொல்லப்படும் காந்த சக்தி உள்ள எழுத்துக்களையும் சேர்த்தே பெயரை அமைக்கவேண்டும். ஏமாற்றுப் பேர்வழிகளிடம் போய்விடாதீர்கள்.

'உன்னை நினைத்து' என்று ஒரு திரைப்படம் வந்ததை நீங்களும் பார்த்திருப்பீர்கள். சூர்யா, ஸ்நேகா நடித்தது. அதில் சார்ளி என்ற நடிகர் ஜோதிடராக நடிக்கிறார். அவருடைய அறையில் அவரும் சினிமா நட்சத்திரங்களும் இருந்து எடுத்துக் கொண்டதாக சொல்லப்படும் படங்கள் நிறையவே மாட்டப்பட்டிருப்பதை நீங்களும் பார்த்திருப் பீர்கள். அவர்களுக்கெல்லாம் இவர்தான் அதிர்ஷ்டமான பெயர் வைத்ததாக சொல்லிக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் படத்தில் அவருக்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்த்திருப்பீர்கள் தானே. இப்படியானவர்கள் இங்கேயும் இருக்கலாம்!

எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் உள்ளம் என்றும் இறைவன் வாழும் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 3

# பிழவாதம் எங்களுடன் பிறந்தது பிரச்சினைகள் பிசின் போன்றது

*3, 12, 21, 30* போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள். பெயர் எண்ணில் *3*ஆம் எண் இருந்தால் கூட அதே பலன்கள் தான் இவர் களுக்கும்.

அமைதியான சுபாவம் கொண்ட இவர்கள் கொஞ்சம் கர்வம் பிடித்தவர்களாக இருப்பார்கள். யாராவது வாய் தவறி தப்பாக ஏதாவது பேசிவிட்டால் போதும், உடனே இவர்களது முகம் சுருங்கிவிடும். முகத்தில் இருந்த சிரிப்பு மூன்று மைல்களுக்கு அப்பால் போய்முகாமிட்டுவிடும். இந்த எண்காரர்கள் அடுத்தவர்களைப் பாராட்டி அதிகம் பேசமாட் டார்கள்.

இவர்கள் அடுத்தவர்களின் நம்பிக்கைக்கு உரியவர் களாக நடந்து கொள்வதால் இவர்களோடு இணைந்து தொழில் புரிவதற்கு பலரும் மகிழ்ச்சியோடு முன்வருவார்கள்.

இவர்களிடத்தில் பொறாமைக்குணம், குறிப்பாக பெண்களிடத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அக்கறை காட்டுவதால், நம்பிக்கையும் பொறுப்பும் வாய்ந்த பதவி இவர்களைத் தேடிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் விவகாரங்களில் இவர்களின் அணுகுமுறை மிகவும் வித்தியாசமாகவே இருக்கும். இவர்களில் சிலர் காதலுக்காக உயிரை விடவும் தயாராகவே இருப்பார்கள். தங்களது காதல் நிறைவேறும் வரை காத்திருப்பார்கள். இதனால் அநேகமானவர்கள் தாங்கள் காதலித்தவரையே திருமணம் செய்து கொள்வதுண்டு. ஆனாலும், இவர்களது கல்யாணம் பெரும்பாலும் கலாட்டா கல்யாணமாகவே முடியும். காதலில் வெற்றி பெறுவதற்காக இவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராகவே இருப்பார்கள்.

3ஆம் எண்காரர்கள் பொதுவாகவே அமைதியான தோற்றத்தைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். எல்லோரிடமும் அன்பாகவே பேசுவார்கள். ஆனால் கோபம் வந்துவிட்டால் அப்பப்பா! குறிப்பாக பெண்கள் ருத்ர தாண்டவமே ஆடிவிடுவார்கள். திருமணமான இந்த எண்காரப் பெண்கள் தங்கள் கணவனை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவே அதிகம் விரும்புவார்கள்.

இதனால், தாம்பத்ய வாழ்வில் சிலசமயம் பிரச்சினைகள் ஏற்படலாம். இந்த எண்காரர்கள் 7ஆம், 8ஆம் எண்காரர்களைக் கண்டிப்பாகத் திருமணம் செய்துகொள்ளவே கூடாது. அப்படி செய்து கொள்வதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு இவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். சில சமயம் விவாகரத்துகள் கூட நடக்கலாம். அல்லது குடும்பத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படலாம். ஏற்கனவே, இந்த எண்காரர்களைத் திருமணம் செய்து கொண்டவர்கள் தங்களது பிறந்த திகதிக்கு ஏற்ப நட்பான எண்களில் பெயரை வைத்துக்கொண்டு என் ஜோதிட அட்டவணைப்படி உச்சரித்து எழுதி வந்தால் நல்ல பலனைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்களில் சிலர் குறுக்கு வழியில் போய் மற்றவர்களை எப்படி ஏமாற்றுவது என்ற குள்ளநரித் தந்திரம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதேபோல், எவர் என்ன சொன்னாலும் அந்த விமர்சனங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், வெட்கப்படாமல் அதே தவறை மீண்டும் செய்வார்கள்.

பொதுவாகவே இந்த எண்காரர்கள் பண்பாகவும் அன்பாகவும் பேசுவதால் பெரிய மனிதர்கள் பலரும் இவர்களுக்கு நண்பர்களாக இருப்பார்கள். அதேபோல் பெரிய பதவிகளில் இருப்பவர்களிடம் இவர்களுக்கு அதிக செல்வாக்கு இருக்கும். பல சமயங்களில் அவர்களின் உதவிகளும் இவர்களுக்குக் கிடைக்கும்.

இவர்களின் கையில் பணம் இருந்தால் தான் மகிழ்ச்சி யாக இருப்பார்கள். இல்லையென்றால் மனம் சோர்ந்து போய் அமைதியை இழந்து மனம் தளர்ந்து விடுவார்கள்.

பிடிவாதத்தின் பிறப்பிடம் எதுவென்று கேட்டால், இந்த 3ஆம் எண்காரர்களைப் பிடித்துக் காட்டிவிடலாம். அந்த அளவிற்கு பிடிவாதம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். குறிப்பாக காதல் விவகாரங்களில் இந்தக் காதல் விஷயத்தில் ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லாமல் கண்மூடித்தன மான காதலில் ஈடுபடுவார்கள். ஒரு சிலர் திருமணத்திற்கு முன்பே இந்த இன்பத்தை அனுபவித்துவிடுவார்கள். இதனால் இவர்களில் அநேகமானவர்கள் திருமணத்திற்கு முன்பே அந்த புனிதத்தன்மையை இழந்திருப்பார்கள். தாய்க்குலமே தயவுசெய்து என்னைத் திட்டாதீர்கள்.

அடுத்தவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் நிறையவே இருக்கும். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசிலர் அதில்தங்களுக்கும் ஒரு பங்கு கிடைக்கவேண்டும் என்று விரும்புவார்கள். 21ஆம், 12ஆம் திகதிகளில் பிறந்தவர்களிடம் இந்த எண்ணம் இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

எந்தவொரு விடயத்தையும் மனப்பாடம் செய்வது என்பது இவர்களுக்கு பெரிய கஷ்டமாகவே இருக்கும். எதுவுமே இவர்களுக்கு எளிதில் மனப்பாடம் ஆகாது. அதேநேரம், ஒருமுறை மனப்பாடம் ஆகிவிட்டால் எளிதில் மறக்கவே மாட்டார்கள். இந்த எண்காரர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். அனாலும் பிறந்த மாத எண்ணில் 2ஆம், 8ஆம், 7ஆம் எண்கள் இருந்தால் 15 வயதிற்குப் பிறகு கல்வியில் தடை ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இந்த எண்காரர்கள் எதையுமே மூடிமறைத்துப் பேசமாட்டார்கள். அதேபோல் மூடி மறைத்துப் பேசுகிறவர்களைக் கண்டாலும் இவர்களுக்குப் பிடிக்காது. அதனால் இவர்களிடம் பழகுகிறவர்கள் தங்களுடைய 'பரம' இரகசியங்களைக்கூட இவர்களிடம் சொல்லிவிடுவார்கள். இவர்களுடன் பழகுவது என்பது எவருக்கும் மிக எளிதாகவே இருக்கும்.

இவர்களைப் பார்ப்பதற்கு ஆரோக்கியமானவர்களைப் போல் தோற்றமளித்தாலும் சளித்தொல்லை, மூட்டுவலி போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறர்களாக இருப்பார்கள்.

நிர்வாகத் திறமையில் இந்த எண்காரர்கள் மிகவும் கெட்டிக்காரர்காளக இருப்பார்கள். அதேபோல், இவர்கள் எங்கே இருந்தாலும் தங்களைத் தனியாக அடையாளம் காட்டிக்கொள்வதில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள். அதேபோல், இவர்கள் இருக்கும் இடத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகுதியாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்களில் சிலர் திருமணத்திற்கு முன்பு என்னதான் ஆட்டம் போட்டாலும் திருமணத்திற்குப் பின்பு துணையிடம் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போய்விடு வார்கள்.

இவர்கள் ஒரு காரியத்தில் ஈடுபட்டால், அதில் இலாபத்தைப் பெறவேண்டுமென்ற நோக்கமே மேலோங்கி இருக்கும். வந்தால் வரவு, சென்றால் செலவு என்ற விளையாட்டெல்லாம் இவர்களிடம் இருக்காது.

பணம்தான் இந்த உலகத்தில் எல்லாம் என்ற கொள் கையை கொண்டவர்கள். இவர்கள் பணத்தைக் கொண்டு தான் எல்லாவற்றையுமே மதிப்பிடுவார்கள். வாழ்க்கையில் உள்ள சுகபோகங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர்களாக இருந்தாலும், அதற்காக தங்களிடம் உள்ள பணத்தையெல்லாம் கண்மூடித்தனமாக செலவு செய்யமாட்டார்கள்.

கவர்ச்சிகரமாக வாழவே இவர்கள் மிகவும் ஆசைப்படு வார்கள். அதேபோல் சில ஆண்கள் தாடி, மீசை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். கடினமான போக்குடையவர்களைப் போல் இவர்கள் தோற்றமளித்தாலும் உண்மையிலேயே இவர்கள் இளகிய மனம் படைத்தவர்களாகத்தான் இருப் பார்கள். அடக்கம், பொறுமை, பெரியோர்களுக்கு கீழ்ப் படிதல் போன்ற குணங்கள் இவர்களிடம் நிறையவே காணப்படும்.

இவர்களில் சிலருக்கு குரு ஆதிக்கம் குறைந்திருக்கும். அப்படி இருந்தால் வாழ்வில் இவர்கள் சிறிது மந்தமாகவே இருப்பார்கள். சூதாடிகளாகவும் ஆடம்பரப் பிரியர்க ளாகவும் அளவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடனாளிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் இருப்பார்கள். குரு ஆதிக்கம் விபரீதமாக இருந்தால், அதிகார வெறியை ஏற்படுத்திவிடும். இதனால் அறிவு மிகுந்திருந்தாலும் கருணை குறைவும் மதிப்பு குறைவும் ஏற்படும்.

இவர்களுக்கு தோல் சம்பந்தமான வியாதிகள் வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இதனால் இவர்கள் நெல்லிக்கனியை சாப்பிட்டு வருவது நன்மை பயக்கும்.

விதி எண்ணில் 7ஆம் எண்ணோ, 8ஆம் எண்ணோ இருந்தால் வாழ்க்கையில் மோசமான நிலையில் இருப்பார் கள். சில சமயம் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு பிரச்சினைகளால் பின்னப்பட்டிருப்பார்கள். பெயர் எண்ணை அதிர்ஷ்டமான எண்ணுக்கு அழைத்துக் கொள்வதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 4

# கௌரவம் கண் போன்றது
# சந்தேகம் சளி போன்றது

*4, 13, 22, 31* போன்ற திகதிகளில் உள்ளவர்களும் இந்த எண்ணில் பெயரைக் கொண்டவர்களும் 4ஆம் எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

பொதுவாகவே இந்த எண்காரர்களை நாலும் தெரிந்த வர்கள் என்றுதான் சொல்லுவார்கள். உண்மையும் அதுதான். மற்ற எண்காரர்களைப் போல் அல்லாது எல்லா விஷயங் களையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் இவர்களிடம் நிறையவே இருக்கும். பள்ளிப்படிப்பில் இவர்கள் பூரணத்துவம் பெற்றவர்களாக இல்லாவிட்டாலும், அனுபவப் படிப்பின் மூலம் நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பார்கள். கொஞ்சம் கர்வம் கொண்ட இவர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள். அதேபோல் பேசினால் அது மற்றவர்களின் மனதைப் புண்படுத்தும் விதத்திலும் அமைந்து விடும். அதாவது இவர்களின் வார்த்தைகளில் தேன்துளிகள் கொட்டாது. தேள்கொட்டியதைப் போல் இருக்கும்.

எவரையாவது திட்ட வேண்டுமானால், பலர் மத்தியில் ஒளிவுமறைவின்றி பகிரங்கமாகவே அவர்களைத் திட்டித் தீர்த்துவிடுவார்கள். அது எவராக இருந்தாலும் சரியே. இதனால் இந்த எண்காரர்களுக்கு நண்பர்களும் குறை வாகத்தான் இருப்பார்கள். அதேபோல் இவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடனும் பழகமாட்டார்கள். பொறுக்கி எடுத்த ஒரு சிலரைத்தான் தங்களுடைய நண்பர்களாக வைத்திருப் பார்கள். அந்த நண்பர்களும் சில சமயம் நிரந்தரமாக இருக்கமாட்டார்கள். அதிகமாகவே கௌரவம் பார்க்கும் இவர்கள் தங்களை மதிக்காதவர்களின் வீட்டுப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கமாட்டார்கள்.

இந்த எண்காரர்களிடம் ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு மாறான ஒரு கருத்தைத்தான் இவர்கள் சொல்லுவார்கள். உண்மையி லேயே சச்சரவு செய்யவேண்டும் என்ற நோக்கம் இல்லாத போதிலும், இந்தக் கொள்கையினால் இவர்கள் எதிர்ப்பை விலைகொடுத்து வாங்கிக் கொள்வார்கள். இதனால் இவர்களுக்கு மறைமுகமான எதிரிகள் இருப்பார்கள்.

அதேபோல், எந்த ஒரு விஷயத்தையும் அடுத்தவர்கள் பார்க்கும் கோணத்திலிருந்து இவர்கள் பார்க்க மாட்டார்கள். வேறு ஒரு கோணத்திலிருந்துதான் பார்ப்பார்கள். எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் எதிர்க்கட்சிக்காகத்தான் வாதாடுவார்கள்.

இவர்களின் மனதில் எந்த ஒரு ரகசியமும் அதிகநாள் துயில் கொள்ளாது. யாரிடமாவது சமயம் வரும்போது சொல்லிவிடுவார்கள். அப்படி அந்த ரகசியத்தைச் சொல்லி மகிழ்வதில் இவர்களுக்கு அலாதியான இன்பம். இவர்களிடம் ரகசியங்களைச் சொல்லுகிறவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும்.

செல்வம் சேர்ப்பதைப் பற்றியெல்லாம் இவர்களுக்கு அக்கறை இருப்பதில்லை. அப்படியே முயன்றாலும் அந்த .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தில் இவர்களுக்கு வெற்றியும் கிடையாது என்பதுதான் பொதுவான விதி. அதேநேரம் இவர்களின் தேவைகள் பூர்த்தியாகும் விதத்தில் இவர்களுக்கு சிலர் உதவி செய்வார்கள்.

இந்த 4ஆம் எண்காரர்களின் விதி எண்ணில் 7ஆம் எண் இருந்தால் 45 வயதிற்குப் பிறகு இவர்களின் வாழ்க்கைப் பாதையே மாறிவிடும். விதி எண் என்று இங்கே நான் குறிப்பிடுவது பிறந்த திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண். விதி எண்ணில் 7ஆம் எண் இருந்தால் இவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் இவர்களால் பணத்தை சேமித்து வைக்கவே முடியாது. அதேபோல் 2ஆம் எண் காரர்கள் அடிக்கடி இவர்களின் வாழ்க்கையில் புகுந்து விளையாடிக் கொண்டிருப்பார்கள். இந்த இடத்தில் முக்கி யமான ஒரு விடயத்தைச் சொல்லி விடுகிறேன். 4ஆம் எண்காரர்களின் விதி எண்ணில் 7ஆம் எண் இருந்தால் அவர்கள் கண்டிப்பாக 45 வயதிற்குப் பிறகு தங்கள் பெயரை அதிர்ஷ்ட எண்ணுக்கு மாற்றிக் கொள்ளவேண்டும்.

திடீர் திடீரென்று உணர்ச்சி வசப்படும் இவர்கள். தன்மான உணர்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள். ஒரு சிறிய வார்த்தை தப்பாகச் சொன்னால்கூட இவர்களின் மனம் புண்பட்டுவிடும். உடனே தனிமையை நாடிச்சென்று விடு வார்கள். இவர்களுக்கு அதிக நண்பர்கள் இருக்கமாட் டார்கள். காரணம், இவர்கள் எளிதில் எவருடனும் பழகாதது தான். ஒருவரைப் பற்றி நன்கு அராய்ந்த பிறகே நட்புக் கொள்வார்கள். அதிலும் மிகச் சிலரே இவர்களுக்கு நல்ல நண்பர்களாக இருப்பார்கள். அந்தச் சிலரிடத்தில் இவர்கள் மிகவும் விசுவாசமாக இருப்பார்கள். ஆனாலும், அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கருத்துக்கு எதிராக செயல்பட்டால் அவர்களை யும் கைகழுவி விடுவார்கள்.

இந்த எண்காரரர்கள் தங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு மத்தியில் ஒரு தலைவனைப் போல் இருப்பார்கள். தலை வனுக்கு ஆதரவு கிடைப்பதைப் போல இவர்களுக்கும் நல்ல ஆதரவு கிடைக்கும். அதேநேரம், தலைவருக்கு சில சமயம் எதிர்ப்புகள் வந்து சேருவதுபோல் இவர்களுக்கும் எதிர்ப்புகள் வந்து சேரும்.

இவர்கள் உள்ளுக்குள் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர்களாக இருந்தாலும்வெளியில் அதைக் காட்டிக் கொள்ளமாட்டார்கள். அதை எவரும் கண்டுபிடித்து விடாதபடி கோபக்காரர்களைப் போல் நடிப்பார்கள்.

சந்தேகம் என்பது இவர்களின் உடன்பிறப்பு. யாரை யுமே எளிதில் நம்பிவிடமாட்டார்கள். சிறுசிறு விடயங் களைக் கூட இவர்களே நேரில் சென்று பார்ப்பார்கள்.

அடிக்கடி எரிச்சல் அடையும் இவர்கள் விரைவில் பொறுமையையும் இழந்துவிடுவார்கள். அடுத்தவர்களின் மனதில் உள்ளதை மிக எளிதில் புரிந்துகொள்ளும் சக்தி இவர்களிடம் நிறையவே இருக்கும். கூச்ச சுபாவம் அதிகம் உள்ள இவர்கள் என்னதான் கஷ்டம் வந்தாலும் பிறரிடம் போய் தலைகுனிந்து நிற்கமாட்டார்கள். அதேபோல் எந்த நிலையிலும் தங்கள் கௌரவத்தையும் விட்டுக்கொடுக்கமாட் டார்கள். இவர்களுடைய பிடிவாத குணம் இவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தாலும், சில சமயங்களில் ஈடு செய்யமுடியாத சில இழப்புகளுக்கும் இவர்கள் முகங் கொடுக்க வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் கண்களுக்கு இவர்கள் திமிர் பிடித்தவர்களாகத் தெரிந்தாலும், உண்மையிலேயே இவர்களின் இதயம் மென்மையானதுதான். மிகுந்த செலவாளிகளாக இருக்கும் இவர்கள் வறுமை வந்தாலும் பொறுமையோடு தாங்கிக் கொள்வார்கள்.

இவர்களிடம் தாழ்வு மனப்பான்மை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இதனால் தாங்கள் இருக்கும் இடத்திற்கு தங்களைவிட திறமையானவர்கள் வந்தால், இவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுவார் கள். சில சமயங்களில் அவர்களை வெட்டிவிடும் விதத்தில் காய்களை நகர்த்துவார்கள். அதற்கக் காரணம் இவர்களை விட அவர்கள் பெயர் வாங்கிவிடக்கூடாது என்பதுதான்.

தங்கள் குடும்பத்தின்மீது அதிக அக்கறை கொண்டிருக் கும் இவர்கள், எந்த நிலையிலும் தங்கள் குடும்பத்தை வறுமையில் வாட விடமாட்டார்கள். இவர்கள் அதிகம் உணர்ச்சிவசப்படும் தன்மை கொண்டவர்களாக இருப்பதால் நரம்புத்தளர்ச்சி நோய் ஏற்பட்டு மன அமைதியை இழக்க நேரிடும். ஆனாலும் காலப்போக்கில் குணமடைவார்கள்.

இந்த எண்காரர்கள் மற்றைய எண்காரர்களைப் போல் அடிக்கடி டாக்டரிடம் போகமாட்டார்கள். மிகவும் முடியாமல் போனால்தான் போவார்கள். முதுமை அடைய அடையத்தான் இவர்கள் சுறுசுறுப்பாக செயல்பட ஆரம்பிப்பார்கள். மனச்சோர்வு அடையவே மாட்டார்கள். இவர்கள் 'இன்பங்களை' அனுபவிப்பதில் அளவோடு நடந்து நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி வாழலாம்.

இந்த எண்காரர்களிடம் பழிவாங்கும் குணம் அதிகமா கவே இருக்கும். ஆனாலும் எதிரிகள் இவர்களிடம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டால் பழசை எல்லாம் மறந்துவிட்டு, மீண்டும் பழைய நண்பர்களைப் போல் பழக ஆரம்பித்து விடுவார்கள். ஒருவருடன் எவ்வளவுதான் நட்பாகப் பழகினாலும் ஒருவரை வெறுக்க ஆரம்பித்து விட்டால் கடைசி வரையில் கடுமையாக அவரை வெறுப்பார்கள். அனுதாபம் காட்டவே மாட்டார்கள். இது இந்த எண்காரர்களின் தலையாய சுபாவமாக இருக்கும்.

இந்த எண்காரர்களில் சிலர் தங்களுடைய சக்திக்கு மேற்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு இரவும் பகலும் கடுமையாக உழைத்து உடம்பையும் கெடுத்துக்கொள்வார்கள். திட்டமிட்டு தங்கள் வாழ்க்கையை நடத்தினாலும் சில சமயங்களில் தோல்வியும் அடைந்து விடுவதால் சோர்வடைந்துபோய் வேதனைப்படுவார்கள். உண்மையைச் சொல்லப்போனால், இந்த எண்காரர்கள் ஓரளவு கோழைகளாகவே இருப்பார்கள்.

ஆனால், அது வெளியில் தெரியாது காட்டிக் கொடுக்கவும் மாட்டார்கள். உருட்டல், மிரட்டல் எல்லாம் தாராளமாகச் செய்வார்கள்.

இவர்களிடம் சந்தேகக் குணம், அதிகமாக இருப்பதால் வீட்டில் இருக்கும்போது இரவில் ஒழுங்காக தூங்கவும் மாட்டார்கள். அடிக்கடி எழுந்து கதவு சாத்தப்பட்டிருக்கிறதா என்று தள்ளிப் பார்த்துக் கொள்வார்கள். இந்த எண்காரர்களில் சிலருக்கு எந்த விஷயத்திலும் பொறுமையே இருக்காது. இவர்களைப் பற்றி எவராவது கொஞ்சம் கௌரவக் குறைவாகப் பேசிவிட்டால் போதும், அதை இவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியாது. அப்படி பேசியவருக்கு புத்தி புகட்டும் வரையில் ஓயவே மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குணம் இவர்களுடைய முன்னேற்றத்திற்கு தடை யாகவே இருக்கும்.

தங்களை எவரும் அதிகாரம் செய்வதை இவர்கள் விரும்பமாட்டார்கள். யாராவது தங்களை அதிகாரம் செய்வதைப் போல் தோன்றினாலும் அதன்பிறகு அந்த இடத்திலேயே இருக்கமாட்டார்கள். அது என்னதான் இலாபகரமான வேலையாக இருந்தாலும் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல் உதறித்தள்ளிவிட்டு அங்கிருந்து வெளியேறி விடுவார்கள்.

காதல் விவகாரத்தை எடுத்துக்கொண்டால் சில சமயங்களில் இவர்கள் பைத்தியக்காரர்களைப் போல நடந்து கொள்வார்கள். இவர்களைக் காதலிப்பவர்கள் என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார்கள். காதலுக்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்யத் தயங்கமாட்டார்கள். ஆனாலும் பெரும்பாலும் இவர்களின் காதல் தோல்வியில் தான் முடியும். அதேபோல் காலதாமதமாகித்தான் இவர்களுக்கு திருமணம் நடக்கும்.

சிலருக்கு 35 வயதிற்குப் பிறகும் நடகக் வாய்ப்பி ருக்கிறது. காதல் திருமணம் நடந்தால் அது கலாட்டா கல்யாணமாகத்தான் இருக்கும். அது மதம், மொழி, மாறிய திருமணமாகவும் இருக்கும்.

அரசியலிலிருந்து அடுப்பங்கரை வரையில் உள்ள சமாச்சாரங்களை எல்லாம் கிரகித்துக் கொண்டே இருப் பார்கள்.

இதனால்,

தெருவில், ஊரில், நாட்டில் நடக்கும் சகல விடயங் களைப் பற்றியும் இவர்கள் நிறையவே தெரிந்து வைத்திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்கள். அதேபோல் எதையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலில் கண்டதை எல்லாம் படித்தும், கேட்டும், பார்த்தும் தெரிந்து கொள்வார்கள். இவர்களிடம் வாக்குவன்மை இருந்தாலும் பேச்சில் இனிமை இருக்காது. துடுக்காகவே அபிப்பிராயங்களைச் சொல்லும் இவர்கள் மனதில் உண்மை என்று பட்டதை பலர் மத்தியில் பட்டென்று போட்டு உடைத்து விடுவார்கள். இவர்கள் நேரிடையாகவே எதையும் பேசிவிடுவதால் இவர்களுக்கு 'இனிமையான' எதிரிகள் பலர் இருப்பார்கள்.

வெளி உலகத்தில் இவர்களுக்கு பெயரும், புகழும் இருந்தாலும் வீட்டில் இவர்கள் எதிர்பார்க்கும் அமைதியும் அன்பும் இருக்காது. இவர்கள் வாங்குவதைவிட கொடுப்பதுதான் அதிகமாக இருக்கும். 4ஆம் எண் என்றால் அது பணத்தைத்தான் குறிக்கும். இவர்களுக்கு எப்படியாவது பணம் வந்துசேரும். ஆனால் தங்குவதுதான் கஷ்டம். இருந்தாலும் ஒரு சிலருக்கு மட்டும் பணம் எளிதில் கிடைக் காது. இவர்கள் 13, 22 திகதிகளில் பிறந்தவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் எங்காவது தொழில் செய்வதைவிட வியாபாரத்தில் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றத்தை அடை யலாம். எண்ணங்களிலும், செயல்களிலும் புதுமை உணர்வு கொண்ட இவர்கள் ஒரு விதத்தில் போராட வந்தவர்களாகவே தோன்றுவார்கள். இவர்களது விதி எண்ணில் 6ஆம் எண் இருந்தால் இவர்களுக்கு சொந்தமாக வீடு, வாசல், காணி, பூமி இருக்கும். அப்படி இல்லையென்றால் வந்து சேரும். இது கண்டிப்பாக நடக்கும். எனது ஆய்வுகளின் மூலம் நான் கண்டு பிடித்திருக்கும் உண்மை இது. இந்த எண்காரர்கள் எந்தக் காரணம் கொண்டும் 7ஆம் எண்காரர்களைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொள்ளக்கூடாது. அப்படி செய்து கொண்டவர்கள் அதிர்ஷ்ட எண்ணுக்கு பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும். *8*ஆம், *1*ஆம் எண்காரர்கள் இவர்களின் வாழ்க் கைப் பாதையில் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டே இருப் பார்கள். *45* வயதிற்குப் பிறகும் இவர்கள் காதல் விவகாரங் களில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவார்கள். அதேபோல் ஒரு சிலரிடம் தாழ்வு மனப்பான்மையும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 5

## காதலிப்பது எங்களுக்கு கைவந்த கலை கழற்றிவிடும்போதும் கொடுக்கமாட்டோம் விலை

ஒவ்வொரு மாதத்திலும் வரும் **5, 14, 23**ஆம் திகதிகளில் பிறந்தவர்களும், இந்த எண்ணில் பெயர் வைத்திருப்பவர் களும் **5** எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

**5**ஆம் எண் என்பது மற்ற எண்களைவிட சற்று வித்தியாசமான ஒரு எண்ணாகவே கணிக்கப்படுகிறது. இந்த எண்ணைப்பற்றி உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். பாருங்கள்.

அதாவது, ஒன்பது எண்களுக்கு நடுவில் இருப்பது இந்த **5**ஆம் எண்தான். முதலிலிருந்து எண்ணினாலும் கடைசியில் இருந்து எண்ணினாலும் நடுவில் வந்து நிற்பது **5**ஆம் எண்தான். இதனால் தான் இந்த எண் எல்லோருடனும் ஒத்துப் போகக்கூடிய ஓர் எண்ணாக இருக்கிறது.

அதேபோல்,

இந்த எண்காரர்களின் வாழ்வில்தான் திடீர் திடீரென்று பிரச்சினைகளும் வந்து சேரும். எடுத்துக்காட்டாகப் பார்த்தால் ஒரு பத்து நாள் இவர்கள் தங்கள் வாழ்வில் நிம்மதியாக இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இருபது நாளும் ஏதாவது ஒரு பிரச்சினையில் சிக்கிக்கொண்டு நாயாக பேயாக அலைந்து கொண்டிருப் பார்கள்.

பெரும்பாலும் இந்த எண்காரர்கள் மிகவும் கவர்ச்சி யாகவே இருப்பார்கள். ஒரு சிலர் இதற்கு விதிவிலக்காகவும் இருப்பதுண்டு.

இந்த எண்காரர்களின் பிறந்த திகதியில் இரண்டு இடங்களில் எண் 5 வந்ததால் திருமணம் காலதாமதமாகித் தான் நடக்கும். அதேபோல் மன அமைதி என்பது இருக்காது. மூன்று இடங்களில் எண் 5 வந்தால் இவர்களுக்கு திருமணம் நடக்குமா என்பது கேள்விக்குறிதான்.

பிறந்த திகதியில் மூன்ற இடங்களில் எண் 5 வருவதை எப்படிப் பார்ப்பது என்று ஒரு சிலர் கேட்கலாம். அவர்களின் கவனத்திற்கு இது.

எடுத்துக்காட்டாக நீங்கள் பிறந்த திகதி 14, பிறந்த மாதம் 5 பிறந்த வருடம் 1985 என்று வைத்துக் கொள்வோம். அதில் நீங்கள் பிறந்த திகதியைக் வட்டினால் $1+4=5$ வருகிறது. மாதமும் 5 வருடத்தைக் கூட்டினால் $1+9+8+5=23=2+3=5$ வருகிறது. பிறந்த வருடத்திலும் 5 தான் வருகிறது. சில சமயம் விதி எண்ணில்கூட 5 ஆம் எண் வரலாம். இப்படித்தான் இதைக் கண்டு கொள்ள வேண்டும்.

வியாபாரத்துறையை எடுத்துக் கொண்டால் இந்த 5ஆம் எண்காரர்கள் தான் அங்கே புகுந்து விளையாடுவார்கள். பொருட்களை வாங்க வருகிறவர்களை எப்படி மடக்குவது என்பது இந்த எண்காரர்களுக்கு கைவந்த கலையாகவே இருக்கும். இவர்களின் கவர்ச்சியான பேச்சும். வசீகரமான தோற்றமும் அதற்கு பக்க வாத்தியம் வாசிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்களுக்கு முதலாம் எண்காரர்களுக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை ஒரு சிறிய எடுத்துக் காட்டின் மூலம் சொல்லுகிறேன்.

முதலாம் எண்காரர்களைப் பொறுத்த வரையில் வர்த்தகத் துறையில் அவ்வளவு திறமை வாய்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள். இவர்கள் நூறு ரூபாவுக்கு வாங்கும் பொருளை 110 ரூபா விலை நிர்ணயித்து விற்பார்கள். வாங்க வருகிறவர்கள் நூறு ரூபாவுக்கோ அல்லது 90 ரூபாவுக்கோ கேட்டால் இவர்களுக்கு கோபம் வந்துவிடும். அவர்களைத் திரும்பி அனுப்பிவிடுவார்கள். காரணம் இவர்கள் பணிந்து போகுத் தன்மை இல்லாததுதான்.

ஆனால் 5ஆம் எண்காரர்கள் அப்படி அல்ல. 110 ரூபாவுக்கு விலை நிர்ணயித்த பொருளை வாங்க வருகிறவர் களுக்கு 160 ரூபா என்று பக்குவமாகச் சொல்லுவார்கள். வந்தவர்கள் 150 ரூபா அல்லது 140 ரூபாவுக்கோ கேட்பார்கள். சரி சரி உங்களுக்காகத் தருகிறேன் என்று சொல்லி அந்தப் பொருளை அவர் தலையில் கட்டிவிடுவார்கள். இதனால் தான் சொல்லுகிறேன் 5ஆம் எண்காரர்கள் வியாபாரத் தந்திரம் தெரிந்தவர்கள் என்று.

இதனால்தான் வர்த்தக நிறுவனங்களுக்குப் பெயர் வைக்கும்போது கூட 5ஆம் எண்ணில் பெயர் வைக்கிறோம்.

இந்த எண்காரர்கள் எப்போதும் எவருடனாவது போராடுவது இவர்களது வாடிக்கையாகவே இருக்கும். இதனால் இவர்கள் பல இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதன் காரணமாக இவர்கள் தங்கள் நரம்பு சக்தியை அதிகம் செலவு செய்வதால் இவர்கள் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய நரம்பு வியாதிகளால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கும். அதிகப்படியான வேலைகளினால் இவர்களின் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவது இயல்பாகவே நடப்பதால் இவர்களுக்கு மிக எளிதில் கோபமும் எரிச்சலும் ஏற்படும். எதற்கும் எளிதில் கோபப்படும் தன்மை கொண்ட இவர்களுக்கு சுளீர் என்று கோபமும் வரும் வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கும். இதனால், இவர்கள் பொறுமையை இழந்து காணப்படுவார்கள்.

இவர்கள் தங்கள் வாழ்வில் பொறுமையைக் கடைப்பிடிக்க கற்றுக் கொண்டால் இவர்களின் வாழ்வில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

இந்த எண்காரர்களின் தாம்பத்திய வாழ்வில் அடிக்கடி விவாகரத்து, பிரிவு என்பது சகஜமாகவே ஏற்படும். இதற்குக் காரணம் இவர்கள் சிந்தித்து எந்த ஒரு முடிவையும் செய்வதில்லை. திடீர் திடீரென்று முடிவு செய்தால் துன்பம் என்பது இவர்களின் தோளில் எப்போதுமே அமர்ந்து கொண்டிருக்கும்.

எவருடனும் எளிதில் பேசி உடனே நட்பை ஏற்படுத்திக் கொள்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள். இதனால், இந்த எண்காரர்களைச் சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் இருக்கும். ஆனாலும், இவர்களுக்கு ஏற்படும் திடீர் கோபத்தினால் இந்த நட்பைத் தொடர்வதைப் பற்றி கொஞ்சம் யோசிப்பார்கள்.

இந்த எண்ணில் பிறந்த சிலர் சமாதானத்தைவிட சண்டையைத் தான் அதிகம் விரும்புவார்கள். குறிப்பாக பெண்கள் - சண்டை என்று வந்துவிட்டால் மந்த மாருதமாக இருக்கும். பெண்கள் சண்டை மாருதமாக மாறிவிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் வன்முறை செயல்களில் ஈடுபடும் சில கோஷ்டிகளின் தலைவர்களும் அரசியலில்இப்படியான வெற்றியைத் தூண்டி விடும் சில அரசியல் வாதிகளும் இந்த திகதியில் பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

அதேநேரம் இந்த எண்ணின் வலிமையைப் பெற்ற சிலர் பல நல்ல காரியங்களில் ஈடுபட்டும் இருக்கிறார்கள்.

இந்த எண்காரர்களுக்கு அநேகமாக இளம் வயதிலேயே திருமணம் நடந்துவிடும். அப்படி இல்லையேன்றால் காலதாம தமாகத்தான் அது நடைபெறும். இந்த எண்காரர் களின் வாழ்வில் திடீர் திடீர் என்று மாற்றங்கள் ஏற்படுவத னால் தான் இந்தத் திகதியில் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லப்படுகிற்து. கூட்டு எண் 5 ஆகவோ திகதி, எண் 5 ஆகவோ உள்ள தினங்களில் திருமணம் செய்து கொண்டால் செய்து கொள்கிறவர்களின் தாம்பத்திய வாழ்வில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படும்.

இந்த எண்காரர்களுக்கு அநேகமாக காதலில் தோல்வி தான். அப்படியே காதலில் வெற்றி பெற்றாலும் அந்த தாம்பத்திய வாழ்க்கை நீண்ட நாள் நீடிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். அப்படி நடைபெறுகின்ற திருமணம் கூட மதம் அல்லது மொழிமாறிய திருமணமாத்தான் இருக்கும். கலாட்டாவில் நடந்த திருமணமாகவே இருக்கும். இதற்கெல்லாம் காரணம்

இவர்களது அவசரப்புத்திதான்.

எல்லா எண்களிலும் மிகவும் சிறப்பான எண் எது என்று கேட்டால் 5ஆம் எண்தான் என்று பலரும் சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்

இந்தக் கருத்துக்கு நான் உடன்பாடு இல்லாதவன்.

என்னுடைய ஆய்வுகளின்படி இந்த எண்காரர்களின் வாழ்வில் தான் திடீர் திடீரென்று பிரச்சினைகள் ஏற்படும். இதனால், இவர்களின் வாழ்வில் எதிர்பாராத திருப்பங்களும் ஏற்படும். காதலித்து ஏமாற்றுகிறவர்களின் சிலரும் இந்த எண்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

சில 5ஆம் எண்காரர்கள் நினைப்பதைப் போல, கன்னாபின்னாவென்று நான் இப்படி எழுதவில்லை. நிறையவே 5ஆம் எண்காரர்களை ஊடுருவிச் சென்று ஆராய்ந்த பிறகுதான் இப்படி எழுதுகிறேன்.

5ஆம் எண்காரர்களிடம் நிறையவே நல்ல குணங்கள் இருந்தாலும், சில 5ஆம் எண்காரர்களிடம் நான் குறிப்பிட்ட இந்த ஏமாற்று விடயம் இருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாகக் காதல் விவகாரங்களில்,

இந்த எண்காரர்களின் சில நடவடிக்கைகளினால், இவர்களின் குடும்பத்திற்கு கெட்ட பெயர் ஏற்படும் வாய்ப்புகளே அதிகமாக இருக்கும்.

சாப்பாட்டுப் பிரியர்களாக இருக்கும் இவர்களில் அநேகமானவர்கள் மாமிச அயிட்டங்களை உண்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். இந்த எண்காரர்கள் என்னதான் செல்வந்தர்களாக இருந்தாலும். எவ்வளவுதான் பெயரும் புகழ் பெற்றிருந்தாலும் அவற்றை விரைவில் இழந்துவிடும் வாய்ப்புகளே அதிகம். கர்வமும் தலைக்கணமும் இவர்களிடம் கொஞ்சம் அதிகமாகவே இருப்பதால், இவர்களுக்கு எவ்வளவுதான் நண்பர்கள் இருந்தாலும், உதவி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டால் இவர்களை விட்டுவிட்டு மெல்ல நழுவி விடுவார்கள்.

கண்மூடித்தனமான சில பழைய பழக்க வழக்கங்களை யும் மரபுகளையும் துணிந்து மீறும் இவர்கள், அவை மண்மூடிப் போகவேண்டும் என்று சொல்லுவார்கள்.

இதனால்,

பலருடைய வெறுப்புகளுக்கும் இவர்கள் ஆளாக வேண்டியிருக்கும். ஆனாலும், அதைப்பற்றியெல்லாம் இவர்கள் அலட்டிக்கொள்ள மாட்டார்கள்.

காதல் விடயங்களிலும் இந்த எண்காரர்கள் கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பார்கள். இந்த எண்காரர்களில் அநேகமானவர்கள் பலரையும் காதலித்து அதில் தோல்வி யடைந்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களின் வாழ்வில் திடீரென்று பிரச்சினைகள் வருவது போல்தான் காதலும் வரும். முன்பின் அறிமுகமில்லாத ஒருவரிடம் திடீரென்று மனதைப் பறிகொடுப்பார்கள். சிறிது நாளில் அவரிடமிருந்து சண்டை போட்டுக் கொண்டு பிரிந்து வருவார்கள். பிறகு வேறு ஒருவரைக் காதலிப்பார்கள். அங்கும் அதே பல்லவி தான். இந்த எண்காரர்களுக்கு இவை எல்லாமே சர்வ சாதாரண விடயமாகவே இருக்கும்.

இந்த எண்காரர்கள் குழந்தைகளுடன் பழகும் போது குழந்தைகளாகவே மாறிவிடுவார்கள். அதேபோல, வாலிபப் பருவத்தினரோடு பழகும்போது புரட்சிகரமான கருத்து களைத் தெரிவிப்பார்கள். அதேநேரம் , கல்வி மான்களோடு பழகும்போது, இவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும் நடந்து கொள்வார்கள். இந்த மாதிரியான மாறுபட்ட கோணங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை மாற்றிக்கொண்டு பழகும் குணம், திறமை இந்த எண்காரார்களிடம் மட்டுமே உண்டு.

ஆனாலும், இவர்களிடம் இருக்கும் திறமையைப் பயன்படுத்தி தங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று முயற்சி செய்யமாட்டார்கள்.

இந்த எண்காரார்களில் சில ஆண்கள் சூதாட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனாலும், அதனால் அவர்களுக்கு இலாபத்தைத் தவிர நஷ்டமே ஏற்படும். இவர்கள் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதால் இவர்களின் நரம்புகள் பலவீனப்பட்டிருப்பதால் வயிற்றுப் புண், தலைவலி போன்ற நோய்களால் இவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவார்கள். இவர்களுக்கு திடீரென்று விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதால், இந்த எண்காரார்கள் மிகவும் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த எண்காரார்கள் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதை கட்டுப்படுத்திக் கொண்டு வாழப்பழகினால் இவர்களுக்கு ஏற்படும் இந்த நோய்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அதேபோல்;

தங்கள் வேலைகளுக்கு மத்தியிலும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது. இந்த எண் கொஞ்சம் பலவீன மான எண் என்பதினால் சில சமயங்களில் இவர்கள் தங்களுக்கு பொருத்தமில்லாத வேலைகளில் அல்லது வியாபாரத்தில் மாட்டிக்கொண்டு அதிலிருந்து வெளியேற முடியாமல் மிகவும் சிரமப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் ஏற்பட்டாலும் எதற்கும் அஞ்சாமல் அதற்கு முகம் கொடுப்பார்கள். ***14, 23, 32, 50, 59*** போன்ற வயதுகளில் இவர்களின் வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்படும்.

பொறுமையும் நிதானமும் பிடிக்காத இவர்கள் எந்தத் துறையிலும் வேகத்தைத் தான் விரும்புவார்கள். மற்றவர்கள் ஆழ்ந்து யோசிக்கும் சில விடயங்களுக்கெல்லாம் இவர்கள் பட்டென்று கூறும் தீர்வைப் பார்த்துவிட்டு பலரும் வியப் படைவார்கள். அதேநேரம் கஷ்டப்படாமல் சுலபமாக பணம் தேடும் தொழில்களையே இவர்கள் கண்டுபிடிப்பர். சில சமயங்களில் இவர்கள் நெளிந்து கொடுக்கும் இயல்பு பிறரிடத்தில் வியப்பை ஏற்படுத்தும். அதேசமயம், எவ்வளவு தான் அடிபட்டாலும் மீண்டும் துள்ளியெழுந்து விடும். இவர்களின் துணிவைக் கண்டு எதிரிகள் கூட அசந்து போவார்கள்.

தீய விடயங்களைக் கேட்டு ரசிப்பதில் அலாதிப்பிரிய முள்ள இவர்கள் அதைத் திருப்பி வேறு எவரிடமும் கூறும்போது அதற்கு காது, மூக்கு வைத்து உண்மையென நம்பும் விதத்தில் பேசுவதில் மிகவும் திறமைசாலிகளாக இருப்பார்கள்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று விரும்புகிறவர்கள். இதனால், பல சிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள். முகஸ்துதியை அதிகம் விரும்பும் இவர்களை புகழ்ந்து பேசி எந்த விதமான காரியங்களையும் சாதித்துக் கொள்ளலாம்.

இன்பமோ, துன்பமோ எந்தவிதமான சம்பவமாக இருந்தாலும் அது சிறிது நேரத்திற்குத்தான் இவர்களைப் பாதிக்கும், அதன் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக எப்போதும் போல் தங்கள் காரியங்களில் ஈடுபட்டு விடுவார்கள். மாறுதல்களைக் கண்டு அஞ்சாத தன்மைதான் இதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

இவர்களிடம் இருக்கும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் என்னவென்றால்,

அடுத்து என்ன செய்யப்போகிறோம் என்பதை இவர்களே அறியமாட்டார்கள். இந்த எண்காரர்களைத் திருமணம்செய்து கொள்ளப் போகிறவர்கள் இவர்களது இந்தக் குணத்தை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். இல்லையென்றால் தாம்பத்ய வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படும்.

எப்போதும் கவர்ச்சியாக இருக்க விரும்பும் இவர்கள் அலங்காரப் பிரியர்களாகவே இருப்பார்கள். அடிக்கடி வண்ண வண்ண உடைகளை மாற்றி தங்களை அலங்கரித்துக் கொள்வார்கள். அதேபோல் வாசனைப் பொருட்களைப் பாவிப்பதிலும் அதிக ஆவம் காட்டி வருவார்கள்.

இவர்களில் சிலருக்கு மனதில் உள்ளதை மறைக்கத் தெரியாது. மனதில் உள்ளதையெல்லாம் அப்படியே கொட்டி விடுவார்கள். இவர்களுடைய காதல் விவகாரங்களைக்கூட மறைக்கமாட்டார்கள்.

45 வயதில்இவர்களின் உடல் நிலை மிகவும் மோசமாக பாதிக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம். இதிலிருந்து இவர்கள் தப்பி விட்டால், எண்பது வயது வரையில் எந்தவித நோய் நொடியும் இன்றி வாழலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கும் பலன்கள் சிலருக்கு பொருந்தாமல் இருந்தால் அதற்குக் காரணம் என்ன தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்ணை ஆட்சி செய்யும் புதன் கிரகத்தின் ஆதிக்கம் குறைந்திருப்பதுதான்.

அப்படியானவர்கள் வாழ்க்கையில் மிகவும் துன்பப் பட்டுக் கொண்டிருப்பார்கள். வாயைத் திறந்தால் பொய்தான் பேசுவார்கள், அடுத்தவர்களை ஏமாற்றி வாழ்வார்கள். அடுத்தவர்கள் செய்யும் தீயகாரியங்களுக்குத் துணை போவார்கள்.

இந்த நிலை மாறவேண்டுமானால்இவர்கள் 'கிரகப்ரீதி' செய்து வரவேண்டும்.

பெரும்பாலும் இந்த எண்காரரர்களுக்கு புத்திர பாக்கியம் குறைவாகவே இருக்கும். சிலருக்கு குழந்தைகளே இருக்காது. ஆனால், வருகின்ற துணையின் எண் சக்தி வாய்ந்ததாக இருந்தால் இந்த நிலையில் மாற்றம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது.

குறிப்பாக, முதலாம் எண்காரரர்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் இதற்கு விமோசனம் கிடைக்கும். அதேநேரம், இவர்களது பிறந்த திகதியில் ஒன்றிற்கு மேற்பட்ட 5ஆம் எண்கள் வந்தால் இவர்கிளின் வாழ்வில் மன அமைதி என்பது இருக்காது.

இந்த எண்காரரர்களுக்கு ஒரு முறையாவது 'அம்மை' நோய் கண்டுவிடும். இவர்கள் நரம்புகளுக்கு பலம் தரக்கூடிய உணவு வகைகளை உள்ள வேண்டும். நெய், பால் இவைகளையும் அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். அதேபோல் அத்திப்பழமும் மிகவும் நல்லது.

இவர்களுக்கு பகையான எண்கள் என்று சொன்னால் அது 3ஆம், 7ஆம் எண்கள் தான். இந்த இரண்டு எண்களும் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதம் நட்பு எண்ணாகும். ***4, 22, 31*** போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுக்கு வியாபாரக் கூட்டாளிகளாக இருப்பது நல்லது. சிவப்பு, பவளம் போன்ற நிறங்கள் இவர்களுக்கு அதிர்ஷ்ட நிறமாகும். வைரம் இவர்களுக்கு அதிர்ஷ்டமான கல்லாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண் 6**

# குழந்தைப் பாக்கியம் எங்களுக்குக் குறைவு குடும்பத்தில் குதூகலமும் குறைவு!

பொதுவாகவே ஒவ்வொரு எண்ணைப் பற்றியும் நான் எழுதும்போது யாரையும் மனதில் நினைத்துக் கொண்டு எழுதுவதில்லை. பல எண்காரர்களையும் சந்திக்கும்போது அவர்களை நான் நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பேன். இதன் மூலம் அவர்களுடைய அங்க அசைவுகளையும், வார்த்தைப் பிரயோகங்களையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

சில நேரங்களில் எனது 'உற்றுப் பார்க்கும்' குணத்தை சிலர் குறிப்பாகப் பெண்கள் - தப்பாகக் கணக்குப்போட்ட சம்பவங்களும் உண்டு. வாய்மொழியால் பேசாமல், உடல் அசைவுகள் மூலம் சொல்லக்கூடிய விஷயங்களும் நிறையவே இருக்கின்றன. இதற்குத்தான் 'உடலசைவு மொழி' (Body Language) என்று சொல்வார்கள். இந்த மாதிரியான சில விஷயங்களை வைத்துப் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் எனது ஆய்வுக்குப் பெரும் உதவியாக இருக்கிறது.

*6, 15, 24* போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருபவர்கள்.

இந்த எண்காரர்கள் ஆடம்பரத்தை விரும்பாதவர்களாகவும் அமைதியானவர்களாகவும் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருக்கிறார்களே என்று இவர்களை நம்பிவிடக்கூடாது. ஆபத்தானவர்களாகவும் இருப்பார்கள். நீருக்கு அடியில் நெருப்பைக் கொண்டு போகின்றவர்கள் என்று சொல்கின்றவர்கள் அல்லவா? அது இவர்கள் தான். இவர்களுடன் பழகும்போது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்.

இந்த எண்காரர்களிடம் விசேஷமான ஓர் அம்சம் இருக்கும். அது என்ன தெரியுமா?

மற்றவர்களால் செய்து முடிக்கமுடியாத ஒரு காரியத்தை இவர்கள் மிகவும் எளிதாகச் செய்து முடித்து விடுவார்கள். அப்படி ஒரு கவர்ச்சியும் திறமையும் இந்த எண்காரர்களிடம் இருக்கும்.

ஆடம்பரத்தை அதிகம் விரும்பாத இவர்கள், தங்களுக்குக் கோபம் வந்தால் எவரையும் எதிர்த்து நிற்கத் தயங்கமாட்டார்கள். கொஞ்சம் பிடிவாதக்காரர்களாக இருக்கும் இவர்கள் எளிதில் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதேநேரம், இவர்களைப் புகழ்ந்து பேசி இவர்கள் மீது அன்பு செலுத்துகிறவர்களுக்காக இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள்.

இவர்களுக்கு நிரந்தரப் பகைவர்கள் என்று எவரும் இருக்கமாட்டார்கள். இவர்கள் இல்லாத இடத்தில் இவர்களைப் பற்றி கன்னாபின்னாவென்று திட்டித் தீர்த்தாலும் இவர்களைக் கண்டதும் வசியமாகி விடுவார்கள். அப்படி ஒரு ஆகர்சன சக்தி இந்த எண்காரர்களிடம் உண்டு.

இவர்கள் தங்களுக்கு பழக்கமில்லாத ஒரு துறையில் அல்லது தொழில் ஈடுபட்டாலும் விரைவில் அந்தத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி பெற்று விடுவார்கள். பொருளாதாரத்துறை, அரசியல் துறை, கலைத்துறை, கல்வித்துறை போன்றவற்றில் இவர்கள் பிரகாசித்தாலும் இவர்களுக்கு எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும்.

அதிகாலையிலேயே எழுந்துவிடும் இவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுவார்கள். வீண்பொழுது போக்கு என்பதெல்லாம் இவர்களுக்குப் பிடிக்காது. இவர்களில் சிலர் ஆன்மீகத்துறையில் அதிகம் ஈடுபாடு கொண்டிருப்பார்கள். பல சமய நூல்கள் எப்போதுமே இவர்களுடைய மனதைக் கவர்ந்து கொண்டிருப்பதால் இறுதிக்காலத்தில் இவர்கள் சிறந்த தத்துவஞானிகளாகப் பரிணமிக்க வாய்ப்பிருக்கிறது.

தங்கள் மன அமைதியைக் கெடுத்துக் கொள்ளும் காரியங்களில் இவர்கள் ஈடுபடுவது குறைவாகவே இருக்கும் இதனால் டாக்டரிடம் போவதும் குறைவாகத்தான் இருக்கும். இந்த எண்காரர்களுக்கு நண்பர்களின் ஆதரவிலோ அல்லது அரசாங்க ஆதரவிலோ வெளிநாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். அதேபோல் ஆதாயம் இல்லாமல் எந்த ஒரு காரியத்திலும் இவர்கள் இறங்கமாட்டார்கள்.

இந்த எண்காரர்களுடைய காதல் விவகாரங்கள் கூட கொஞ்சம் வித்தியாசமானதாகவே இருக்கம். நவநாகரிகமான பெண்களை - ஆண்களை எல்லாம் இவர்கள் விரும்பமாட் டார்கள். அதேநேரம் அவர்களுடைய நடை உடை பாவனை எல்லாம் இவர்களுக்கு எரிச்சல் தரும் அம்சமாகவே இருக்கும். கிராமியப் பெண்களை - ஆண்களைத் தான் இவர்கள் விரும்புவார்கள்.

இந்த எண்கார ஆண்கள் சிலருக்கு 'கன்னிப் பெண் களைத் திருமணம் செய்து கொள்ளும் பாக்கியம் அரிதாகவே இருக்கும். பெண்களுக்கும் இப்படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்களின் 'சொந்தக் குடும்பத்தில்' ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்காது. சிலருக்கு அபூர்வமாக மூன்று குழந்தைகள் இருக்கும். இந்த எண்கார ஆண்கள் வீட்டில் ராமர்களாகவும் வெளியில் கிருஷ்ணர் களாகவும் இருப்பதுதான் இதற்குக் காரணம். பெண்கள் விஷயத்திலும் இப்படித்தான். இந்த எண்காரப் பெண்கள் 'அந்த' விஷயத்தில் கொஞ்சம் உணர்ச்சியற்றவர்களாகவே இருப்பார்கள். என்னிடம் பெயர் மாற்றிக் கொள்ள வந்த சில ஆண்களிடம் (6ஆம் எண்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர்கள்) இந்த விஷயத்தை நான் சொன்ன போது அது உண்மைதான் என்பதை அவர்களும் ஆமோதித் தார்கள்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? அது இவர்களுக்கு நிச்சயமாகப் பொருந்தும். இதற்குத் தலையாய ஒரு காரணமும் இருக்கிறது. அதாவது தங்களுக்கு உதவி செய்கிறார்கள் எவராக இருந்தா லும், அவர்களிடம் இவர்கள் விசுவாசமாக நடந்து கொள்வார்கள். ஒரு சிறு உதவி செய்தாலும் கூட அவர்களைக் கடைசிவரையில் நன்றியோடு நினைப்பார்கள். இவர்களிட முள்ள இந்த நன்றி, விசுவாசம் கடைசிக் காலம் வரை இவர்களைக் காப்பாற்றும்.

அதேநேரம், கிரக நிலை மாற்றமடைந்திருந்தால் அல்லது மற்றைய எண்களின் பாதிப்பு இருந்தால், இந்த நிலை தலைகீழாக மாறிவிடும். செய்த நன்றிகளை எல்லாம் மறந்து அவர்களை தூற்றிக்கொண்டு திரிவார்கள்.

இவர்கள் எந்த இடத்திலும் அதிகநாள் நிரந்தரமாக இருக்கமாட்டார்கள். ஆனால் ஓர் இடத்தை விட்டவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஓர் இடம் உடனே இவர்களுக்குக் கிடைத்துவிடும். இந்தப் 'பாக்கியம்' மற்றைய எண்காரர்களுக்குக் கிடைக்காது. தொழில் விஷயத்திலும் இப்படித்தான். இவர்களிடம் இருக்கும் ஒரு பலவீனம் என்னவென்றால் ஒரே சமயத்தில் பல காரியங்களை ஆரம்பித்து எதிலுமே முழுமையான கவனம் செலுத்த முடியாமல் திண்டாடுவது.

ஏதாவது ஒரு நிறுவனத்திலோ அலுவலகத்திலோ அமர்ந்து வேலை பார்க்கும்போதுதான் இவர்களுடைய திறமை வெளிப்படும். இவர்களுடன் வாதம் புரிந்து வெல்வது என்பது கொஞ்சம் கஷ்டம்தான்.

இவர்களிடம் ஓர் அபூர்வ ஆற்றல் இருக்கும். இவர்களின் பகுத்தறிவைக் காட்டிலும் உள்ளுணர்வுதான் மிகவும் ஆற்றல் உடையதாய் செயற்படும்.

இதனால், எந்த ஒரு விஷயத்திலும் அதன் காரிய, காரணங்களை வைத்து ஒரு முடிவிற்கு வராமல், படாரென்று தங்கள் மனதில் பட்ட ஒரு முடிவைச் சொல்வார்கள். இதில் அதிசயம் என்னவென்றால், அந்த முடிவும் சரியாகவே இருப்பதுதான். ஆரம்பத்தில இவர்களைக் கிண்டல் செய்யும் சிலர்கூட அந்த முடிவுதான் சரியானது என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

இவர்கள் அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபட்டால் விரைவில் முன்னுக்கு வருவார்கள். இந்த எண்காரர்கள் அநேகமாக ஆசிரியர் தொழிலுக்குத் தகுதி உடையவர்களாக இருப்பார்கள். ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ள அநேக மானவர்கள் இந்த எண்காரர்களாகத்தான் இருப்பார்கள். ஒரு சிலர் எழுத்தாளர்களாகவும், பத்திரிகையாளர்களாகவும் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் ஆசைப்படுகின்ற காரியங்கள் சற்றுத் தாமதமானாலும் கண்டிப்பாக நிறைவேறியே தீரும். இதனால் இவர்கள் நல்ல வெற்றியாளர்களாக இருப்பார்கள். ஆனாலும் பெயர் எண் அதிர்ஷ்டமாக இல்லாவிட்டால் இவை எல்லாமே பொய்யாகிவிடும். இவர்களின் வாழ்வில் அடிக்கடி புதிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இந்த எண்காரர்களைப் பற்றி எவரும் இதுவரையில் சொல்லாத ஓர் உண்மையை நான் இப்போது சொல்கிறேன். இந்த எண்கார ஆண்களிடம் பெண்மையின் 'நளினம்' நிறைந்திருக்கும். அதாவது சிலருடைய தோற்றம் பெண்களின் சாயலில் இருக்கும். சிலருக்குப் பெண்களைப் போல் கீச்சுக்குரல் இருக்கும். சில ஆண்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். சிலரது நடை, உடை, பாவனைள் பெண்களைப் போல் இருக்கும். இந்த எண்கார ஆண்களிடம் இப்படி ஏதாவது ஒரு மாற்றம் கண்டிப்பாக இருக்கும். கவிஞர் கண்ணதாசன், நடிகர் பிரசாந்த், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைப் பார்த்தால் இதை நீங்கள் புரிந்து ொள்ளலாம். அதுமட்டுமல்ல பிறந்த திகதியில் எந்த இடத்தில் இந்த **6**ஆம் எண் வந்தாலும் (மாதம், வருடம், கூட்டுத்தொகை) இந்தக் குணம் இருக்கும்.

இந்த எண்காரப் பெண்களிடம் ஆண்களின் கம்பீரமும், கர்வமும் இருக்கும். இவர்கள் ஆண்களைப் போலவே மிகவும் துணிச்சலாக ஒவ்வொரு காரியத்திலும் இறங்கி செயற்படு வார்கள். சிலருக்கு ஆண்களின் குரலைப் போல் முரட்டுக் குரல் இருக்கும். சில பெண்களின் முகத்தைக் கூர்ந்து பார்த்தால் மெல்லியதாக மீசை வளர்ந்திருப்பது தெரியும். காதல் விவகாரங்களில் ஈடுபடுவதும் குறைவாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் நடிகைகள் ஜெயலலிதா, ராதிகா போன்றவர்கள் இந்த எண்களில் பிறந்தவர்கள்தான்.

காட்டில் சில மரங்கள் இருக்கும். அந்த மரங்களின் பக்கத்தில் வேறு எந்த மரங்களையும் அது வளரவிடாது. அதேபோல் தான் இந்த எண்காரர்களில் சிலர் தாங்கள் இருக்கும் இடத்திற்கு எவரையும் நெருங்க விடமாட்டார்கள். தாங்களே அங்கே ராஜாவாக இருக்கவேண்டும் என்றுதான் விரும்புவார்கள். அப்படியே எவராவது நுழைய முயன்றாலும் வெட்டி விடுவார்கள்.

இசை, நடனம், நடிப்பு போன்ற லலித கலைகளில் சிலர் ஈடுபடுவார்கள். ஒரு சிலர் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை இயக்கும் பொறுப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். கலைப் பிரியர்களான இவர்களுக்கு இருதய பலவீனம் இருக்கும். மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. அதேபோல் மறைவான உறுப்புகளில் நோய் வராமல் பார்த்துக் கொள்வதும் நல்லது.

ஒருவர் சொன்னதை மற்றவர்களிடம் சொல்லி இருவரையும் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதில் சிலர் அலாதி இன்பம் காண்பார்கள்.

இவர்களுக்கு நட்பான எண்களாக 1, 2, 9, 5, 4 எண்களும் பகையான எண்களாக 3, 7 எண்களும் செயற்படும்.

இந்த எண்காரர்களுக்குப் பெயர் அதிர்ஷ்டமாக அமையவில்லையென்றால் எல்லாமே தலைகீழாக மாறிவிடும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 7

## தாம்பத்திய வாழ்வில்
## அதிகம் இருக்காது பந்தம்!
## வெளிநாட்டுப் பயணம் எங்களுக்குச் சொந்தம்!

7, 16, 25 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

பொதுவாகவே இந்த எண்ணைப் பற்றிக் கூறும்போது 'Lucky 7' என்று தான் கூறுவதுண்டு. ஆனால், என்னுடைய ஆய்வுகளின்படி அது Lucky Seven அல்ல Tension Seven தான்.

காரணம் இந்த எண்காரர்களுக்குப் பெயரும், புகழும் கிடைத்தாலும் தாம்பத்திய வாழ்வில் பிரச்சினைகளை சுமந்துகொண்டுதான் வாழ்வார்கள். அதாவது தாம்பத்திய வாழ்வில் இவர்களிடம் வேறுபாடுகள் நிறையவே காணப் படும். அதிகமாக உணர்ச்சி வசப்படும் இவர்கள் யோசிக் காமல் ஒரு காரியத்தைச் செய்து விட்டுப் பிறகு வேதனைப் படுவார்கள். இன்னும் சொன்னால் கண்ணீர் விட்டு அழுவார்கள். நிதானத்தை இழப்பதுதான் இதற்குக் காரணம்.

சுற்றுப்புற சூழ்நிலைகளினால் அதிகம் பாதிக்கப்படு கிறவர்கள் இந்த எண்காரர்கள் தான்.

இவர்களிடம் தன்னம்பிக்கை கொஞ்சம் குறைவாகவே இருக்கும். இதனால், இவர்கள் ஒரு காரியத்தில் இறங்குவதற்கு முன்பு, இதில் இறங்கினால் வெற்றி கிடைக்குமா? அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியில் முடியுமா? லாபம் கிடைக்குமா? அல்லது போட்ட பணமே கிடைக்காமல் போய் விடுமா? என்ற ஒரு தடுமாற்ற உணர்வோடு சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்களது இந்த அவநம்பிக்கையின் காரணமாக. இவர்கள் செய்யும் பல காரியங்கள் தோல்வியிலேயே முடியும்.

இவர்கள் எவரிடமாவது கடன் வாங்கினால் அந்தக் கடனை விரைவில் எப்படியாவது அடைத்து விடவேண்டும் என்று நேர்மையான குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். சிலருக்கு அது முடியாமல் போய் விடுவதும் உண்டு.

இவர்களின் மனதிற்குப் பிடித்த எந்த வேலையாக இருந்தாலும் மனச்சாட்சியுடன் அதைச் செய்வார்கள். இவர்களைப் பற்றிய முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால், இவர்களுக்கு உடல் வலிமையைக் காட்டிலும், மன வலிமைதான் நிறையவே இருக்கும். ஆனால் இதைப் புரிந்து கொள்ளாத ஒரு சிலர், தங்கள் உடல் பலத்திற்கு அதிகமாகவே வேலை செய்வதினால், உடல் பலவீனம் அடையும் சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கும்.

பிடிவாதக் குணம் கொண்ட இவர்கள் தாங்கள் செய்கின்ற வேலைகள் எல்லாம் எவ்வித சிக்கலும் இன்றி நடந்து கொண்டிருந்தால் மகிழ்ச்சியோடு இருக்கும் அதேநேரம், எங்காவது ஒரு சிறு தவறு நடந்து அவை தடைப் பட்டு விட்டால், உடனே மனச்சோர்வடைந்து விடுவார்கள்.

இந்த எண்கார ஆண்கள் பெண்களைப் போல் நடந்து கொள்வார்கள். மிகவும் அமைதியானவர்களாக இருப்பார்கள். அச்சம், மடம், நாணம் என்று சொல்லுவார்களே, அது இவர்களின் சொத்தாக இருக்கும். ஆனால் இந்த எண்கார சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் இதற்கு மாறுபட்டவர்களாகவே இருப்பார்கள். ஆண்களை அடக்கி ஆள்வதில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள். வீட்டில் இவர்களின் அதிகாரம் தான் கொடி கட்டிப் பறக்கும். கணவனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள். அவர்களும் இவர்களுக்கு பயந்தவர்களாக இருப்பார்கள்.

இந்த எண்காரப் பெண்கள் சிலர் மிகவும் மோசமாகவே இருப்பார்கள். அண்டலர்லைன் பண்ணிக் கொள்ளுங்கள். 'சில பெண்கள்' கொஞ்சம் பச்சையாகவே சொன்னால் கணவனை விட்டு விட்டு வேறு தொடர்புகளில் ஈடுபட்டு எந்தவிதமான கூச்சமுமின்றி தைரியமாக வாழ்வார்கள். இவர்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட உறவுகள் இருக்கும்.

இந்த எண்காரர்களில் பெரும்பாலானோர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனாலும், தாங்கள் பெரிய குடும்பத்தில் பிறந்தவர்கள் என்று காட்டிக் கொள்ளுவதற்கு மிகவும் முயற்சி செய்வார்கள். அதேபோல் வசதிபடைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் தங்கள் நண்பர்கள் என்று சொல்லிக் கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

இவர்களுக்கு பெயரும், புகழும், வசதி வாய்ப்புகளும் இருந்தாலும் தாம்பத்திய வாழ்க்கை திருப்திகரமாக அமையும் வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும். இவர்களின் உடலில் ஏதாவது ஒரு 'நோய்' ஒளிந்து கொண்டு அடிக்கடி சதுரங்க மாடிக் கொண்டிருக்கும். அங்கவீனர்களாக இருப்பவர்கள். அநேகமாக இந்த எண்காரர்களாகத் தான் இருப்பார்கள்.

எந்தவிதமான குறைகளுமே இல்லாதவர்களைப்போல் நடந்து கொள்ளும் இவர்களின் மனதில் எப்போதுமே ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுத்தல் இருந்து கொண்டு தான் இருக்கும். இவ்வளவு செய்தும் சிறப்பான ஓர் உயர் நிலையை நாம் இன்னும் அடையவில்லையே என்ற மன உறுத்தலாகவே அது இருக்கும்.

சுதந்திரமான எண்ணம் கொண்ட இந்த எண்காரர் களின் தனித்துவம் பல இடங்களில் பளிச்சிடும். அதே நேரம், தங்களை யாராவது அவமானப்படுத்திவிட்டால், அவர் களைப் பழிவாங்காமல் விடமாட்டார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய பதவிகளில் இருந்தாலும் இவர்கள் விடமாட்டார்கள். மேலிடத்திற்கு இரகசியமாகப் புகார் செய்து ஆகவேண்டிய காரியத்தைக் கவனிப்பார்கள்.

**2,11,20,29** போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்காரர்களின் வாழ்வில் அடிக்கடி குறுக்கிடுவார்கள். இந்த எண்காரர்களைத் திருமணம் செய்து கொண்டால் தான் 7ஆம் எண்காரர்களின் வாழ்வில் ஓரளவாவது நிம்மதி கிடைக்கும்.

மதத்தைப் பற்றிய இவர்களுடைய கருத்துக்கள் கொஞ்சம் வித்தியாசமாகவே இருக்கும். வழக்கமான பாதையில் செல்வது என்பது இவர்களுக்குப் பிடிக்காது.

இந்த எண்கார சில பெண்களுக்குக் கொங்சம் வசதியான இடத்தில் திருமணம் நடக்கும். வாழ்க்கையில் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற அக்கறையே ஒரு சிலருக்கு இருக்காது. ஏதோ பிறந்து விட்டோமே என்று வாழ்ந்து கொண்டிருப்பார்கள். சிலர் செல்வம் சேர்க்க முயற்சிப் பார்கள். ஆனாலும், அவர்களால் அது முடியாது போகும். இவர்களது விதி எண்ணில் 3ஆம் எண் இருந்தால் மிகவும் மோசமான வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்து கொண்டிருப் பார்கள். சில சமயம் தற்கொலை செய்து கொள்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்குக் கூட பிரச்சினைகள் உருவாகும். அதிர்ஷ்டமான பெயர் மாற்றத்தின் மூலம் தான் இதை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

இந்த எண்காரர்கள் 8ஆம், 3ஆம், 4ஆம், 1ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளவே கூடாது. இவை எல்லாம் ஜென்மப் பகையான எண்கள். 7ஆம் எண்காரர்களுக்கும் 4 எண்காரர்களுக்கும் இடையில் ஒருவித காந்தசக்தி இருக்கும். பார்த்த உடனேயே ஒருவரை ஒருவர் கவர்ந்து விடுவார்கள். ஆனால், திருமணம் செய்து கொண்டால் அந்தக் கவர்ச்சி கழுத்தறுப்பாகிவிடும்.

நானும் ஒரு பெரிய மனிதன், அதனால், இவர்கள் எல்லோரும் என்னை, மதிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களின் அடி மனதில் இருப்பதால், இவர்கள் பிறரோடு பழகும் போது கூட மற்றவர்கள் தங்களை மதிக்கிறார்களா என்ற எண்ணத்தில் தான் பழகிக் கொண்டிருப்பார்கள். இதனால், சில சமயங்களில் விளையாட்டாகக் கூட அவர்கள் ஏதாவது சொன்னால் இவர்களுக்குக் கெட்ட கோபம் வந்துவிடும்.

இவர்களுக்கு எவராவது புத்திமதி சொன்னால் அதை எல்லாம் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார்கள். இவன் யார் எனக்குப் புத்திமதி சொல்ல? இவன் என்ன என்னைவிட பெரிய அறிவாளியா என்ற மிதப்பில் நடந்து கொள்வார்கள். இவர்களில் சிலர் குறுகிய மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பார்கள். சிக்கனத்தை அதிகம் விரும்பும் இவர்கள் தேவை இல்லாமல் எந்தச் செலவையும் செய்ய மாட்டார்கள். அதேபோல் ஏதாவது சிறு இலாபமாவது கிடைக்காத காரியங்களில் இவர்கள் ஈடுபட மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல், தங்களுடன் பழகுகிறவர்களில் எல்லாருமே தங்களுக்குப் பயன்படுகிறவர்களாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அப்படிப் பயன் படாதவர்களைக் கைகழுவி விடுவார்கள். கிடைக்காத பொருட்களின் மீது இவர்களுக்கு அதிகமான அக்கறை இருக்கும். இந்த ஆசையை மறந்து கிடைத்ததை வைத்து திருப்திப்படும் தன்மையை வளர்த்துக் கொண்டால் இவர்களுக்கு வாழ்வில் நல்ல முன்னேற்றம் உண்டு.

இவர்களிடம் இருக்கும் ஒரு கெட்ட குணம் என்ன தெரியுமா? அடுத்தவர்களுடைய குறைகளைக் கண்டுபிடித்து பலர் மத்தியில் பகிரங்கப்படுத்தி மகிழ்வதில் இவர்கள் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

சமூக சேவைகளில் அதிக நாட்டம் கொண்டிருக்கும் இவர்கள், தங்கள் வாழ்க்கையில் பலவிதமான போராட்டங் களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதேவேளையில், இவர்களது வாழ்வில் பிரச்சினைகளும் தொடர்கதை போல் தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த எண்காரர்களில் ஒரு சில பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகி விடுவார்கள். சிலர் சிறுவயதிலேயே தங்கள் தந்தையை இழந்து விட வாய்ப்பிருக்கிறது.

இந்த எண்காரர்களின் சிலருக்கு இளம் வயதிலேயே திருமணமாகி மக்கள் பேறும் ஏற்பட்டுவிடும். இதனால், இவர்கள் தங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு எந்த ஒரு துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள். உழைப்பின் மூலம் தான் செல்வம் சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை கொண்ட இவர்கள் நல்ல உழைப்பாளியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார்கள். இதனால், எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து கொண்டிருப்பார்கள்.

வெளிநாடுகளில் அதிகம் வேலைபார்ப்பவர்கள் இந்த எண்காரர்கள்தான். ஒருவரது பிறந்த திகதியில் எந்த இடத்தில் (பிறப்பு, வளர்ப்பு, பொறுப்பு, விதி) எண் 7 இருந்தாலும் அவர்களுக்கு கண்டிப்பாக வெளிநாட்டுப் பயணம் உண்டு. பிரயாணம் செய்வது என்றால் இவர்களுக்கு அலாதிப் பிரியம் உண்டு.

இந்த எண்காரர்களில் பலர் பேரறிஞர்களாகவோ, சிறந்த நடிகராகவோ, பெரிய மேதைகளாகவோ பிரகாசிப் பார்கள். சுயநலமில்லாத எந்தக் காரியத்திலும் இவர்கள் ஈடுபட்டால் அதில் வெற்றிபெற்று நல்ல புகழும் பெறுவார் கள். இந்த எண்காரர்களுக்கு மனதிற்கிசைந்த துணை கிடைப்பது என்பது அபூர்வம் தான். விதி எண்ணும் பெயர் எண்ணும் சிறப்பாக இருக்குமானால் நல்ல குடும்ப வாழ்க்கை அமையலாம். இவர்கள் குடும்ப வாழ்வில் இருந்தாலும் துறவறம் பூண்டவர்களைப்போல்தான் இருப்பார்கள். குறிப்பாக ஆண்கள்.

இறுதிக்காலம் வரையில் ஏதாவது ஒரு குறையுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களெல்லாம் முற்றுப் பெறாத இச்சைகளுடனேயே வாழப் பிறந்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இவர்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சாதாரண விஷயங்களில் கூட இவர்களது முயற்சிகள் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும் போது, எதிர்பாராத முறையில் அது தள்ளிப்போகும் அல்லது தட்டிப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக இந்த எண்காரர்கள் அதீத சக்தியைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஆனாலும், இந்த எண்ணின் ஆதிக்கம் குறைவாகவே இருந்தால் தீயபழக்கங்கள் ஏற்படுவதுண்டு. போதைப் பொருட்களை அதிகம் பாவிப்பவர்களாக இருப்பார்கள். அதேபோல் சிற்றின்பத்தில் அதிக நாட்டமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

துன்பத்தைக் கண்டு துவண்டு போகாத இவர்கள் வாழ்க்கைப் பயணத்தில் போராடிக் கொண்டே இருப் பார்கள். இந்த எண்ணைப் பற்றி முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

உடல் ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டவர் கள், Tension னால் அவதிப்படுவோர், தற்கொலை செய்து கொள்கிறவர்கள்; அடிக்கடி விபத்துக்குள்ளாகிறவர்கள், எல்லாருமே இந்த எண்ணில்தான் அதிகம் பிறந்திருப்பார்கள். 7ஆம் எண் இருந்தால் மட்டும் இவை எல்லாம் நடந்துவிடும் என்று எண்ணக்கூடாது. மற்றைய எண்களும் இணையும் போதுதான் 7ஆம் எண்ணின் காந்தசக்தி (Power) உருமாறி விடுகிறது.

7ஆம் எண் என்னதான் பிரச்சினை மிகுந்த எண்ணாக இருந்தாலும் அதிர்ஷ்ட எண்ணுக்கு, அதாவது அந்த எண்ணைக் கட்டுப்படுத்தக் கூடிய எண்ணுக்குப் பெயரை அமைத்துக்கொண்டு அட்டவணைப்படி எழுதி வந்தால் துன்பங்கள் தூளாகும். துயரங்கள் தூரப்போகும். வசந்தம் வாசலில் காத்திருக்கும். அதிர்ஷ்டம் அரவணைத்துக் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 8

# அதிகாரம் செய்வது அல்வா தின்பதைப் போன்றது!

*8, 17, 26* போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

எல்லா எண்காரர்களை விடவும் போராட்டம் நிறைந்த எண்காரர்கள் இவர்கள். போராட்டத்தில் தான் இவர்களின் வாழ்க்கையே ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், இவர்களைப் பார்த்தால் அப்படித் தெரியாது. தங்களது பேச்சு சாதுரியத் தால் அவற்றை எல்லாம் மறக்கச் செய்து சமாளித்து விடுவார்கள்.

ஆனால், இவர்களோடு மிக நெருக்கமாக இருந்து கொஞ்சம் ஊடுருவினால் அல்லது பழகிப் பார்த்தால் எல்லாமே வெட்ட வெளிச்சமாகிவிடும்.

இந்த விஷயத்தில், 8ஆம் எண்காரர்கள் சிறந்த நடிகர்களாகவே இருப்பார்கள். மற்றைய எண்காரர்களைப் போல் இவர்களிடம் ஏதாவது சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருக்க மாட்டார்கள். உடனேயே அதற்குப் பதில் சொல்லிவிடுவார்கள். இல்லையென்றால் இவர்களுக்குத் தூக்கமே வராது.

இவர்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் போராட்டத்தின் நிழல்தான் இருக்கும். மற்றைய எல்லா எண்களையும் பார்க்கும் போது முடிவில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஆனால் 8ஆம் எண்ணைப் பாருங்கள், அதில் ஒரு முடிவு இருக்கும். இதனால் இவர்களுக்கு இனிமேல் பிறவியே இல்லை என்று சொல்லப்படுகிறது.

இந்த எட்டாம் எண் என்பது மிகவும் சக்தி (Power) மிக்க ஓர் எண்ணாகும். இதனால் சாதாரண மனிதர்களால் இந்த எண்ணில் உள்ள சக்தியை எதிர்கொள்ள முடிவதில்லை. இதனால்தான், இந்த எண்காரர்களுக்கு வாழ்வில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணம், யுக பிறவியிலுள்ள யோகி, மகான், ஞானி, சித்தர்கள் போன்றவர்கள் இயற்கையிலேயே மனிதப் பிறவிகளைவிட அதிகம் சக்தி (Power) கொண்டிருப்பதால், இவர்களால் மட்டுமே 8ஆம் எண்ணை எதிர்கொள்ள முடியும்.

இந்த எண்காரர்களை எவரும் தவறாக எடை போட்டு விடக்கூடாது. எவருக்கும் அஞ்சாத அற்புதமான எண் இது. எவரையும் நடுங்க வைக்கக் கூடிய 'ராஜதந்திரம்' கொண்ட எண். இந்த எண்காரர்கள் தங்களை மதிப்பவர்களைத் தான் மதிப்பார்கள். இல்லையென்றால், அவர்களை மறந்துவிடு வார்கள். தங்கள் பலவீனங்கள் மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைப்பதில் மிகவும் திறமைசாலிகளாக இருப்பார்கள். அதேபோல், தன் சொந்த நலனை விட அடுத்தவர்கள் நலனுக்காகப் பாடுபடுவார்கள். இவரிடம் சீண்டும் எண்ணத்துடன் எவராவது வந்தால், வந்தவர் வழி தெரியாமல் போய்விடுவார். இந்த எண்காரர்களிடம் மோதுகிறவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே மோத வேண்டும்.

இந்த எண்காரர்களுக்கு என்று தனிப்பாதை உண்டு. அந்தப் பாதையில் தான் அவர்கள் செல்வார்கள். அதுவும் இவர்கள் அமைத்துக் கொண்ட பாதையாகவே இருக்கும். சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களுக்குக் கூட இவர்கள் உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள். கோபம் என்பது இவர்களது குடும்ப சொத்துப் போன்றது.

இவர்கள் பிற இடங்களில் வேலை செய்வதால் இவர்களின் சக்தி பிறத்தியாருக்குத்தான் சென்றுவிடும். அவர்கள் தான் அதிகம் நன்மை பெறுவார்கள். இதனால் இந்த எண்காரர்கள் சுயமாகவே தொழில் செய்வதால் வாழ்க்கையில் தொழில் அதிபர்களாக வர வாய்ப்புண்டு.

8, 17, 26 என்ற இந்த எண்வரிசையில் 17 ஆம் திகதி என்பது மிகவும் வித்தியாசமான ஓர் எண்ணாகும். 1ஆம் எண்ணும் 7ஆம் எண்ணும் சங்கமமாகித்தான் இந்த 17ஆம் எண் வருகிறது. இரண்டுமே மிக சக்தி வாய்ந்த எண்கள். 1ஆம் எண் என்பது சூரிய ஆதிக்கத்தில் உள்ள எண். எந்த இடத்திலும் தாங்களே முதல்வர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊற்றெடுக்கச் செய்யும் எண்ணாக இரு இருக்கிறது. 7ஆம் எண் என்பது கலைத்துறையோடு அதிகம் சம்பந்தப்பட்டது. இதனால் கலை ஆர்வமும் இவர்களிடம் அதிகம் நிறைந்திருக்கும். அந்தத் துறையோடும் தொடர்பிருக் கும். அதேபோல் வெளிநாடுகளில் புகழ்பரப்பும் எண்ணாக இது இருக்கும். இந்தத் திகதியில் பிறந்த பெண்களை எளிதாக வசப்படுத்தி விடலாம். இந்தத் திகதியில் பிறந்தவர்கள் சாதாரணக் குடிசையில் பிறந்தவர்களாக இருந்தாலும் சீக்கிரத்தில் சீமானாகி விடுவார்கள். அதேபோல், குதர்க்கம் பேசுவதிலும் இவர்களுக்கு நிகர் இவர்கள் தான்.

எதிலும் இடைவிடாத முயற்சி இருக்கும். எதையும் சமாளித்துக் கொண்டு முன்னேறுவார்கள். இவர்களுக்குப் பிறகும் இவர்களைப் பற்றி மக்கள் பேசும்படியாக அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களைச் செய்துவிட்டுப் போவார்கள். செலவு விடயத்தில் இவர்களுக்கு சற்றுக் கஞ்சத்தனம் இருக்கும். எதிலும் இவர்கள் சிக்கனமாகவே செலவு செய்வார்கள். இவர்கள் கையில் எப்போதுமே சொந்தப் பணமோ, பிறர் பணமோ, பண நடமாட்டம் அதிகம் இருக்கும்.

இவர்கள் வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் அனுபவிப்பார்கள். தாம்பத்திய வாழ்வில் இவர்களுடைய துணை மிகவும் ஒத்துழைப்பாயிருக்க வேண்டும். இல்லையென்றால் 'ச்சீ... நீ வேண்டாம்' என்று தள்ளி வைத்து விடுவார்கள். ஒவ்வொரு சிறு விடயத்தையும் உன்னிப்பாகவே கவனிக்கும் இவர்கள் பலவற்றையும் கற்க வேண்டும் என்று விரும்புவார்கள். தனிமையை விரும்பும் இவர்கள் அதேசமயம், பலரும் தம்முடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

இவர்கள் பலருக்கு நல்ல யோசனை சொல்வார்கள். ஆனால், இவர்கள் மாத்திரம் ஏதோ எண்ணிக் கொண்டு மனதளவில் உழன்று கொண்டிருப்பார்கள். இவர்கள் சுதந்திர புருஷர்கள் என்பதினால் மற்றவர்கள் தங்கள் காரியத்தில் தலையிடுவதை அவ்வளவாக விரும்பமாட்டார்கள். அடுத்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்டாலும் இறுதி முடிவு என்னவோ இவர்களின் விருப்பமாகத்தான் அரங் கேறும்.

இவர்களுள் சில பேர் பேராசை மிகுதியால் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயல்வதும் உண்டு.

8ஆம் எண்ணுக்கு 8ஆம் எண் எப்போதுமே உதவி செய்வதில்லை. யதேச்சையாக அப்படி நடந்தாலும் அது நிரந்தரமாக இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய ஆய்வுகளின் முடிவின்படி நான் நிறையப்பேருக்கு சொல்லிவரும் விடயமும் இதுதான். ஒரே எண்காரர்கள் இருவர் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பதுதான். உதாரணமாக 8ஆம் எண்காரர்கள் அதே 8ஆம் எண்காரரைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. இது நிறையவே பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவர்களிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குறைவாகவே இருக்கும். குறிப்பாக வாரிசு விடயத்திலும் பிரச்சினை ஏற்படும். இப்படித் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு குழந்தைகளே இல்லாமல் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிறையபேர் என்னிடமும் வந்திருக்கிறார்கள். சிலருக்கு ஒரு குழந்தை மட்டுமே இருக்கும். கொஞ்சம் விசாரித்துப் பார்த்தால் அதுவும் வளர்ப்புக் குழந்தையாகவே இருக்கும்.

பொதுவாகவே 8ஆம் எண்காரர்களைப் பற்றிச் சொல்வதென்றால் போராட்டம் நிறைந்த ஓர் எண்ணாகவே இதைக் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதில் போராடித்தான் வெற்றி பெற வேண்டும். தாம்பாளத்தட்டில் வைத்து எந்த ஒரு வெற்றியையும் எவரும் இவர்களுக்குக் கொடுப்பதில்லை. இந்த எண்காரர்களிடம் எவரும் வாய் கொடுத்துத் தப்பிவிடவும் முடியாது. நீங்கள் ஒன்று சொன்னால் அதற்கு அவர்கள் பத்துச் சொல்வார்கள். இந்த எண்ணில் பிறந்தவர்கள் வாழ்க்கைத் துணையாக வந்து விட்டால் அவ்வளவு தான். இதே நேரம், கணவன், மனைவி இருவருமே 8ஆம் எண்காரர்களாக இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். இந்த எண்காரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறவில் ஈடுபடுவதற்கு அதிக ஆர்வம் காட்டுவார் கள். குறிப்பாக ஆண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8ஆம் எண்ணைக் கட்டுப்படுத்தக்கூடிய ஓர் எண் என்றால் அது 5ஆம் எண்தான்.

இவர்கள் மற்றவர்களோடு பழகும் விதத்தில் எல்லோரையும் மிக எளிதில் கவர்ந்து விடுவார்கள். இதனால் பெரிய, பெரிய பதவிகளில் உள்ளவர்கள் கூட இவர்களிடம் பிரியமாகப் பழகுவார்கள். இவர்களில் சிலர் எந்த வேலையும் செய்யாமல் பிறரை ஏமாற்றிப் பிழைப்பதைத் தொழிலாகக் கொண்டிருப்பார்கள். இந்த விஷயத்தில் தங்கள் உயிர் நண்பர்களைக் கூட விட்டு வைக்க மாட்டார்கள்.

இவர்கள் ஒரு காரியத்தைச் செய்ய ஏற்றுக்கொள்ளும் போது அதற்கு நிறையவே எதிர்ப்புகளும், எதிர்வாதங்களும் ஏற்படும். ஆனாலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத இவர்கள் தாங்கள் எடுத்த காரியத்தை வெற்றியாக்குவதற்கு முயற்சி செய்வார்கள். இதனால் மனக்கசப்புகளும் எதிர்ப்புகளும் இவர்களுக்கு நிறையவே உருவாகும்.

அதேநேரம், இவர்களுடைய வாழ்க்கையில் அடிக்கடி மிக அதிகமான துயரங்களும், கஷ்டங்களும், அவமானங்களும் ஏற்படும். மிகப் பெரிய கலாரசிகர்களாக இருக்கும் இவர்களில் சிலர் தாம் விரும்பும் எந்த ஒரு பொருளையும் அடையும் பாக்கியம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

சில சமயங்களில் இவர்களுக்கு ஒவ்வாத பட்டங்களும் பதவிகளும் தாமாகவே வந்து கிடைக்கும். இதனால், அந்தப் பதவிகளுக்கு தகுதியானவர்கள் இவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள். இவர்களுக்கு மறைமுக எதிரிகள் நிறையப் பேர் இருப்பார்கள். அப்படி இருந்தாலும் இவர்களை நேருக்கு நேர் எதிர்ப்பதற்கு அவர்கள் முன்வர மாட்டார்கள். அப்படி எதிர்ப்பதற்கு முன்வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை இந்த எண்காரர்கள் மிக எளிதில் வென்று விடுவார்கள்.

அப்படியும் இல்லை என்றால், அவர்களை வசியப் படுத்தி தங்கள் பக்கம் இழுத்துக் கொள்வார்கள். இந்த எண்காரர்களிடம் இருக்கும் மிகப்பெரிய ஒரு பலம் இது. இந்த எண்களில் உள்ள ஆண்கள் பெண்களைக் கவர்வதிலும் பெண்கள் ஆண்களைக் கவர்வதிலும் பயங்கரத் திறமைசாலி களாக இருப்பார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் இவர் களால் ஏமாற்றப்படுகிறவர்களும் இவர்கள் மீது வெறுப்புக் கொள்ளமாட்டார்கள். அதற்குப் பதிலாக இவர்களின் திறமையில் இரசனை கொண்டவர்களாக மேலும் மேலும் அவர்களின் மீது அன்பு செலுத்திக் கொண்டே இருப்பார்கள். அப்படி ஒரு ராசி இந்த எண்காரர்களுக்கு உண்டு.

இந்த எண்காரர்கள் சிலரிடம் பணப் புழக்கம் ஏராளமாகவே இருக்கும். ஆனால், அது அவர்களுடைய பணமாக இருக்காது. அடுத்தவர்களிடம் வாங்கி ரோல் பண்ணும் பணமாகவே இருக்கும்.

சில சமயங்களில் முன்கோபக்காரர்களாக இருக்கும் இவர்கள் கனவான்களாக காட்சி அளிப்பதால் இவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். ஒரு சிலர் வெளிப்பார்வைக்கு மட்டுமே நல்லவர்களாக இருப்பார்கள். ஆனால் உள்ளம் என்பது அவ்வளவு சுத்தமானதாக இருக்காது. இவர்களில் சிலர் எந்த சூழ்ச்சியில் கலந்து கொண்டாலும் தங்கள் பெயர் வெளியில் வராதபடி விழிப்புடன் கவனித்துக் கொள்வார்கள்.

இவர்களிடம் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருக்கும். ஆனால், வெளியில் தெரியாதபடி சாதுர்யமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மறைத்துக் கொள்வார்கள். 8ஆம் எண்காரர்கள் 8ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொண்டதனால் கவலைப்படத் தேவையில்லை. பெயரை அதிர்ஷ்ட எண்ணுக்கு மாற்றிக்கொண்டால் பிரச்சினையில்லை.

அமைதியான தோற்றமுடைய இவர்களின் உடலில் எப்போதும் ஏதேனும் ஒருநோய் இருந்து கொண்டே இருக்கும். ஆனாலும், அந்த நோயினால் இவர்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படமாட்டார்கள்.

சில ஆண்கள், பெண்கள் விடயத்தில் கொஞ்சம் பலவீனமானவர்களாகவே இருப்பார்கள். (சில பெண்களும் அப்படித்தான்) இதனால் இவர்களுடைய எதிரிகள் பெண்களைப் பயன்படுத்தி இவர்களைத் தங்கள் வசம் இழுத்துக்கொண்டு காரியங்களை சாதித்துக் கொள்வதும் உண்டு.

நாட்டியக் கலைஞர்கள், சங்கீத வித்வான்கள், மந்திர வாதிகள், சோதிடர்கள், கைரேகை நிபுணர்கள் போன்றோர் இவர்களுடைய நண்பர்களாக இருப்பது போல், உயர்ந்த பதவிகளில் இருக்கும் அரசியல் வாதிகளும் செல்வந்தர்களும் இவர்களின் நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். இவர்கள் இடத்தில் இருக்கும் கல்வித் தகைமையும் பேச்சுத் திறனும் தான் இதற்குக் காரணமாக இருக்கும்.

இதனால், இவர்கள் தங்கள் எதிரிகளை வெல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்கள். தங்களைப் பற்றி மற்றவர்கள் குறைவாக எண்ணுகிறார்களோ என்ற ஒரு மயக்க உணர்வு இவர்களுக்குள் இருந்து கொண்டே இருக்கும். இதன் காரணமாக,

தாங்கள் அப்படி ஒன்றும் குறைவானவர்கள் அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எடுத்துக் காட்டுவதற்காக சில காரியங்களைச் செய்வார்கள். அடுத்தவர்களின் இரகசியங்களைப் பேசி மகிழும் இவர்களின் மனம், இறுதியில் தங்கள் குடும்ப இரகசியங்களையே சொல்லும் அளவிற்கு பலவீனமடைந்து விடும்.

எப்போதும் அதிகமாகப் பேசாமல் கொஞ்சம் மௌனமாக இருக்கக் கற்றுக் கொண்டால் இந்தப் பலவீனம் குறைந்துவிடும்.

கொஞ்சம் தலைக்கனம் உள்ள இவர்கள், தங்கள் இறுதிக் காலங்களில் நண்பர்களின் உதவிகளை இழந்து மிகவும் கஷ்டப்படுவார்கள். இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இவர்கள் எப்படி இருந்த போதிலும் இவர்களின் பிள்ளைகள் நல்லவர்களாக வளர்வார்கள். அந்தப் பிள்ளைகளின் முயற்சியால் குடும்பம் நல்ல நிலைமைக்கு வரும். இவர்கள் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதனால் கிடைக்கக் கூடிய இலாப நஷ்டங்களைப் பார்க்காமல் செய்யமாட்டார்கள். இந்த எண்கார சில ஆண்களுக்கு வேறு சில பெண்களுடன் உறவு இருக்கும். இதனால் வீட்டில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகளும் உண்டு.

8ஆம் எண்காரர்கள் என்ற உடன் ஒரு சிலர் தவறான கண் கொண்டே இவர்களைப் பார்ப்பார்கள். இதனால் இவர்களின் மனதில் எப்போதும் தனிமை உணர்வே ஏற்படும். சற்றுத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு நிறையவே பிரச்சினைகளும் எதிர்ப்புகளும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். சில சமயங்களில் இவர்களின் வாழ்க்கை வருந்தத் தக்க முறையில் முடிவடைவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கொஞ்சம் அதிகமாக பொய் பேசுவார்கள். ஆனாலும் இவர்கள் பேசும் தோரணையைப் பார்த்தால் அது உண்மையாகவே தோன்றும். ஆனால், இவர்கள் கொஞ்சம் ஞாபகமறதிப்பேர்வழிகளாகவும் இருப்பதால், முன்பு என்ன பொய் சொன்னோம் என்பதை மறந்து வேறு எதையாவது சொல்லி மாட்டிக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் நிறையவே உண்டு.

அந்தச் சந்தர்ப்பத்தில் கூட மாட்டிக் கொள்ளாமல் சாதுர்யமாகத் தப்பித்துக்கொள்வார்கள். இவர்கள் வழக்காடு வதில் மிகவும் வல்லவர்களாக இருப்பார்கள்.

தங்கள் விருப்பத்திற்கு மாறாக தவறுகளைச் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இவர்கள் அடிக்கடி சிக்கித் தவிக்க வேண்டிய சம்பவங்களும் நிறையவே உருவாவதுண்டு. அதே நேரம், தங்கள் மனதிற்கு தவறு என்று பட்டதையும் சரி என்று வாதாடும் சிலரும் இந்த எண்காரரர்களில் உண்டு. **4**ஆம் எண் காரர்களும் ***01***ஆம் எண்காரரர்களும் இந்த எண்காரர்களின் வாழ்வில் அடிக்கடி சங்கமமாவதுண்டு. அதேபோல் இவர்கள் என்னதான் பொய் பேசினாலும் ஜக ஜாலங்கள் செய்தாலும் இவர்கள் வாழும் சுற்றுப் புறங்களில் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கும். இப்படி ஒரு ராசி இந்த எண்காரரர் களுக்கு மட்டுமே உண்டு.

இந்த எண்காரரர்களின் பேச்சில் கவர்ச்சி அதிகம் இருப்பதால்தான் இந்த எண்காரரர்களில் பலர் அரசியல் வாதிகளாக இருக்கிறார்கள். எதிலுமே பொறுமையாகவே இருக்க விரும்பாத இவர்கள் யாராவது இவர்களுக்கு எதிராக ஏதாவது ஒரு காரியத்தைப் பண்ணி விட்டாலோ, பேசி விட்டாலோ அதற்கு உடனே பதிலடி கொடுக்காவிட்டால் இவர்களுக்குத் தூக்கமே வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்களாக இருப்பார்கள். அதேபோல், பெரிய, பெரிய பதவிகளை வகிக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள். ஒரு சிலர் அவர்கள் எண்ணியதைப் போலவே உயர் பதவிகளை அடைவதும் உண்டு.

இந்த எண்ணின் விசேட தன்மை என்னவென்றால், இந்த எண் மிக அதிர்ஷ்டமாக அமையும் பொழுது மிகப் பெரிய பதவிகளைக் கொடுத்து கூடவே சக்திக்கு மிஞ்சிய பயங்கரமான பொறுப்புக்களையும் சுமத்தக் கூடியது.

இந்த எண்காரர்களில் அதிர்ஷ்ட சாலிகளாக இருப்பவர் களை நெருங்கி விசாரித்தால் இந்த உண்மை புரியும். இவர்கள் நல்ல காரியங்களில் ஈடுபட்டால் வெற்றி பெறுவார்கள். தீயகாரியங்களில் ஈடுபட்டால் தோல்வியைத் தான் தோளில் போட்டுக் கொள்வார்கள். இந்த எண் காரர்களில் ஒரு சிலர் முகத்திற்கு முன்னால் முகஸ்துதி பாடிவிட்டு அவர்கள் சென்றதும் அவரைப் பற்றி தூற்றும் கலையில் கைதேர்ந்தவர்க ளாக இருப்பார்கள்.

மற்ற எண்காரர்களைப் போல் இவர்கள் எட்டாம் எண்ணின் சக்தியை அதிகரிக்க முயற்சி செய்யக்கூடாது. இந்த எண்காரர்களில் இருவகையினர் இருக்கிறார்கள். ஒரு சாரார் கீழ்த் தளத்தில் உள்ளவர்கள். மற்றொரு சாரார் மேல் தளத்தில் உள்ளவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பலன் உண்டு.

சற்று தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு மனித நீதியில் எதிர்ப்பு ஏற்படும். அவர்களின் வாழ்க்கை வருந்தத் தக்க வகையில் முடியும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களை பிறர் தவறாகப் புரிந்து கொண்டிருந்த போதிலும் இவர் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கப்படியே எதையும் செய்து முடிப்பார்கள். கலை உள்ளம் கொண்ட இவர்கள் ஒரு விடயத்தைப் பற்றி நன்றாகவே நேர் அர்த்தத்துடன் பேசி இருப்பார்கள்.

ஆனால், எதிராளியோ அதற்கு வேறு தனி அர்த்தம் கற்பித்துக் கொண்டு இவர்களை வெறுப்பார்கள். இவர் களுக்கு அநேக நற்குணங்கள் இருந்தாலும் அடுத்தவர்கள் இவர்களைப் பாராட்டமாட்டார்கள். அப்படி பாராட்டு கிறவர்கள் சந்தர்ப்பவாதிகளாக இருப்பார்கள்.

இவர்களுக்குப் பகையான எண்கள் 3,7,9,3 ஆம் எண்காரர்கள் இவர்களுக்கு ஜென்மப் பகையான எண் காரர்கள், 8ஆம் எண்ணைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே எண் 5ஆம் எண்தான். 8ஆம் எண்காரர்கள் முடிந்த அளவிற்கு 5ஆம் கூட்டுத்தொகையில் பெயர் வைக்க முடிந்தால் சிறப்பாக இருக்கும்.

இவர்களின் இரத்தத்தில் எப்பொழுதுமே இலேசான விஷக்கலவை இருந்து கொண்டே இருக்கும். இதனால் ஏற்பட இருக்கும் துன்பத்தைப் போக்க மிதமான உணவை உண்ண வேண்டும். இரவில் உண்ணாமல் இருப்பதே நல்லது. கோப்பி, டீ போன்றவற்றை அறவே நீக்குவது நன்மை தரும். யோகாசனம், பிராணாயமம் போன்றவற்றைப் பழகிக் கொள்வதும் சிறப்பு. போராட்டம் என்பது இவர்களது வாழ்வில் பொக்கிஷம் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 9

# வெற்றிகள் என்றும் எங்கள் பக்கம் இல்லற வாழ்வில் கொஞ்சம் சண்டையும் இருக்கும்!

*9, 18, 27* போன்ற திகதிகளில் பிறந்தவர்களும் இந்த எண்ணில் பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் 9 ஆம் எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

பிறருக்கு அடங்கி நடக்க விரும்பாத இவர்கள் சுதந்திரமான இயல்புடையவர்களாக இருப்பார்கள். எதிலும் நிதானம் இல்லாத இவர்கள் அதிக உணர்ச்சி வசப்படுகிறவர் களாக இருப்பார்கள். இவர்களுக்கு அசட்டுத் துணிச்சல் அதிகம்.

இதனால், சொல்லிலும் செயலிலும் உணர்ச்சிவசப் பட்டு பேராபத்தைத் தேடிக் கொள்வார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் இவர்களுக்கு அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படும். எல்லோரிடத்திலும் கடுமையாக நடந்து கொள்ளும் இவர்கள் தாங்கள் காதலிப்பவர்களிடத்திலும் அப்படியே நடந்து கொள்வார்கள்.

ஆனால், அந்த கடுமைக்குள்ளே ஒழிந்து கொண்டி ருக்கும் உள்ளன்பானது அவர்களை அடிமைப் படுத்திவிடும். எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்ள இவர்கள் பணத்தை அள்ளி வீசுவார்கள். அதில் வெற்றி பெற முடியாவிட்டால்,

அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். பயம் என்றால் என்னவென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத இவர்கள் குறுக்கு வழியில் செல்வதைத்தான் அதிகம் விரும்புவார்கள். சண்டைகளுக்கெல்லாம் அஞ்சமாட்டார் கள். கலகக்காரர்கள் என்று இவர்களைச் சொல்லலாம். Police என்றால் வருகின்ற எண் எது என்று பாருங்கள்.

Police

873135=27=2=7=9

அதேபோல் war என்பதை எடுத்துப்பாருங்கள்

war

6+1+2 = 9

இந்த எண்காரர்களின் மனமும் இப்படித்தான் இருக்கும்.

9ஆம் எண்காரர்களைப் பற்றி அடுத்தவர்கள் குறை கூறுவதை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். தங்களைப் பற்றி மிக உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கும் இவர்கள் தங்களுடைய திட்டங்களில் பிறர் தலையிடுவதை விரும்ப மாட்டார்கள். அதேநேரம் இந்த எண்காரர்களில் சிலர் தவறு செய்கிறவர்களைத்தான் அதிகம் விரும்புவார்கள்.

மற்றைய எண்களின் சங்கமமின்றி தனி எண்ணாகிய 9ஆம் திகதியில் பிறந்தவர்கள்தான் அரச அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள், பெரும் தொழில் அதிபர்களாக இருப்பார்கள்.

அதேபோல் 18, 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களின் வாழ்க்கை வேறு விதமாகவே அமைந்திருக்கும். இவர்களைப் பற்றி பிறந்த திகதிப்படி எப்படி இருப்பார்கள் என்று எழுதும்போது குறிப்பிடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் மனதில் எப்போதுமே ஓர் அச்ச உணர்வு வீடு கட்டி அமர்ந்திருக்கும்.

அதாவது; நடக்கக்கூடாத காரியங்களை எல்லாம் இவர்களாகவே கற்பனை செய்து கொண்டு, அது அப்படியே நடந்து விடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு எவ்வளவு பெரிய பதவிகள் கிடைத்தாலும், அதனால், இவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள். மேலும் பல முயற்சிகளில் ஈடுபடுவார்கள். இந்த எண்காரர்களில் சிலருக்கு குறிப்பாக பெண்களுக்கு பேராசை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

புத்திக் கூர்மையுள்ள இவர்கள் குறுக்கு 'வழியில் செல்வதற்குத் தான் அதை அதிகம் பயன்படுத்துவார்கள். இந்த எண்கார ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒன்றிற்கு மேற் பட்ட உறவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கும்.

இவர்களைப் பார்த்து யார் அதிகம் பயப்படுவார்களோ அவர்களிடம் தான் இவர்கள் அதிகம் அன்பு காட்டுவார்கள். பயப்படுவதைப் போல் பாவனை காட்டினால் போதும். அவர்களை தங்கள் அருகிலேயே வைத்துக் கொண்டு அவர்களுக்கு அன்பு காட்டி அவர்களுக்கு வேண்டிய உதவி களையும் செய்வார்கள். இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான குணம் இந்த எண்காரர்களிடத்தில் மட்டும் இருப்பதைக் காணலாம்.

கொஞ்சம் சோம்பேறிகளாக இருக்கும் இவர்கள் அதை விட்டு விட்டு சுறுசுறுப்பாகச் செயல்பட்டால் வாழ்க்கையில் விரைவாக முன்னுக்கு வருவார்கள். இந்த எண்காரர்களில் சிலர் தங்களுடைய பிடிவாதத்தை நிலைநாட்டுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள் தனமான சில காரியங்களில் ஈடுபட்டு அதனால் பல இழப்புகளுக்கும் ஆளாவார்கள்.

இவர்களில் சிலர் தங்களது காரியம் ஆக வேண்டு மானால் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயங்கமாட்டார் கள். கொஞ்சம் பச்சையாகவே சொல்வதாக இருந்தால் காலில் விழத் தயங்காதது போல், காலை வாரிவிடவும் தயங்க மாட்டார்கள்.

இந்த எண்காரர்கள் சிலரிடம் வித்தியாசமான ஒரு குணம் இருக்கும். அதாவது இவர்கள் யார் யாருடன் அதிகம் பழகுகிறார்களோ அவர்களிடம் இருக்கும் தீய பழக்கவழக்கங் களை எல்லாம் இவர்கள் பழகிக் கொண்டு வந்து விடுவார்கள். நல்ல கலாரசிகர்களாக இருக்கும் இந்த எண்காரர்களின் ஒரு சிலரின் குணம் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும். இவர்கள் நல்ல கலைப்படைப்புகளிலும் ஈடுபடுவார்கள். ஆனாலும் கலையைத் தங்கள் தொழிலாகக் கொண்டால் அதில் இவர்கள் வெற்றி பெறுவது என்பது கேள்விக்குறிதான்.

இவர்களின் கையில் கொஞ்சம் பணம் வந்துவிட்டால் சோம்பேறித்தனமும் கூடவே குடிவந்துவிடும். கையில் இருந்த காசெல்லாம் கரைந்த பிறகுதான் விழித்துக்கொண்டு, தட்டுத் தடுமாறியபடியே ஓடுவார்கள். அதேபோல் தங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான ஒரு திட்டத்தையோ, குறிக் கோளையோ வகுத்துக் கொள்ளமாட்டார்கள்.

இதன்காரணமாக, துடுப்பு இல்லாத படகைப் போல்தான் இவர்கள் வாழ்க்கைக் கடலில் மிதந்து கொண்டிருப்பார்கள். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆவல் இவர்களிடம் நிறையவே இருந்தாலும் அந்த ஆவல் எந்தத் துறையிலும் நீடித்து நிற்காது. ஒரு துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது முன்னேறிச் சென்றதும் இவர்களுக்கு வெறுப்பு வந்துவிடும். இதனால் படாரென்று வேறு ஒரு துறைக்கு மாறிவிடுவார்கள். இப்படியே மாறிமாறிச் செல்வதால் பொன்னான காலத்தையும் வீணாக்கிவிட்டு இறுதியில்,

எதிலுமே முழுமையான வெற்றியடையாதவர்களாகத் தடுமாறி நிற்பார்கள். இவர்களிடம் இருக்கும் சில தீய செயல்களினால் இவர்களிடம் இருக்கும் அறிவுத்திறனை எவருமே அவ்வளவாக பொருட்படுத்துவதில்லை.

இதனால், தங்களை மதிக்க வேண்டியளவு எவருமே மதிப்பதில்லை என்ற குறை இவர்களின் அடிமனதில் இருந்துகொண்டே இருக்கும். இந்த எண்காரர்கள் எவரையும் எளிதில் நம்பமாட்டார்கள். எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டே பார்ப்பார்கள். இன்னும் சொல்லப்போனால் இவர்களுக்கு நன்மை செய்ய வருகிறவர்களைக் கூட இவர்கள் தீயவர்களாகவே நினைப்பார்கள்.

இதனால், இவர்களுக்கு உண்மையான நண்பர்கள் என்று சொல்லும் அளவிற்கு எவரும் இருக்கமாட்டார்கள். ஆபத்து என்று வருகின்ற போது நழுவுகின்ற நண்பர்கள் தான் அதிகம் இருப்பார்கள். இந்த எண்காரர்கள் தங்கள் மனதில் பட்டதை பச்சையாக உடைத்துச் சொல்லி விடுவார்கள். தங்கள் ரகசியங்களை மறைத்துக் கொள்வதில் கவனமாக இருப்பார்கள். குறிப்பாகப் பெண்கள்.

டாக்டர்களின் கத்தியோ, ஊசியோ இவர்களில் மேனியில் முத்தமிடவில்லை என்றால் அது உலக அதிசயமாகவே இருக்கும். அதாவது இவர்களுக்கு விபத்துக் கள் நடந்து அறுவைச் சிகிச்சை நடக்கும் வாய்ப்புகள் நிறையவே உண்டு என்பதுதான் இதன் பொருள். இதனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்காரர்கள் வாகனங்கள் ஓட்டும்போது மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

சுறுசுறுப்பாக ஓடிக்கொண்டிருக்கும் இவர்களின் வாழ்க்கை இவர்கள் செய்யும் சில பைத்தியக்காரத்தனமான செயல்களினால் திடீரென்று தடம் மாறிப் போய்விடும்.

இதனால், சிறிது காலத்திற்கு இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாமல் போய்விடும். அப்படி ஒரு ராசி இந்த எண்காரர்களுக்கு உண்டு. இவர்கள் அநேகமாக 18ஆம் திகதி பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

இவர்கள் மனம் எப்போதும் குழம்பிய நிலையிலேயே இருக்கும். அதேபோல் இவர்களுடைய உள் மனமும் தேவையற்ற சிந்தனைகளுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும். அமைதியோடு அமர்ந்து சிந்திக்கும் சக்தியை இவர்கள் வளர்த்துக் கொண்டால் இவர்களின் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

பேச்சுத் திறமையில் வல்லவராக இருக்கும் இவர்களின் பேச்சில் மயங்கியவர்கள் பின்னர் ஏமாற்றத்திற்கு ஆளாவதும் உண்டு. அதேபோல இந்த எண்காரர்கள் மிகவும் அவசரப் புத்தியுடையவர்களாகவே இருப்பார்கள். இதனால், சிறிதும் யோசிக்காமல் ஒரு காரியத்தைச் செய்து விட்டு பிறகு வருந்துவார்கள். இதனால் இவர்களால் ஆரம்பிக்கப்படுகின்ற பல காரியங்கள் பாதியிலே நின்று போவதும் உண்டு.

இந்த எண்கார ஆண்களில் சிலர் வெளியூர் செல்லும் போது சில பெண்களோடு தொடர்பு ஏற்படும். ஆனாலும், அந்தத் தொடர்பினால் ஆரம்ப காலத்தில் சில நன்மைகள் ஏற்பட்டாலும் பின்னாளில் பெரும் தீமைகள் ஏற்படுவதற்கு அந்தத் தொடர்பு ஏதுவாக அமைந்துவிடும். இதனால், அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்பு கொஞ்சம் சிந்தித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

மக்கள் மனதில் அதிருப்தியை உருவாக்கி, கிளர்ச்சி களையும் உருவாக்கி வரும், அரசியல்வாதிகளுள் பலர் இந்த எண்ணுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதை நீங்கள் காணலாம்.

இந்த எண்காரர்களுக்குப் பகையான எண்கள் 8உம் 2உம். இதில் 2ஆம் எண்காரர்கள் ஜென்மப் பகையானவர்கள். எக்காரணம் கொண்டும் 9 ஆம் எண்காரர்கள் 2ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. ஜாதகம் பார்த்து எந்த ஜோதிட நிபுணர்கள் சொன்னாலும் இந்த எண்காரர்கள் திருமணம் செய்து கொண்டால் கண்டிப்பாக அது விவாகரத்தில் தான் முடியும். ராகு, சனி, சுக்கிரன் வீடுகள் எல்லாம் இந்த விடயத்தில் எடுபடாது. ஏற்கனவே இந்த எண்காரரைத் திருமணம் செய்து கொண்டவர்கள் தங்கள் பிறந்த திகதிக்கு ஏற்ற விதத்தில் பெயர்களை அதிர்ஷ்டமாக மாற்றிக் கொள்வதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

இந்த எண்காரர்களில் 18ஆம் திகதி பிறந்தவர்களின் வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். ஒவ்வொரு காரியத்திலும் இவர்கள் போராடித்தான் வெற்றி பெற வேண்டும். முழுமையான விபரங்களை பிறகு எழுதுகிறேன். 27அம் திகதி பிறந்தவர்களைப் பார்த்தால் ஓர் இடத்தில் நிலையாக இருக்கமாட்டார்கள். வியாபார விடயத்திலும் இவர்கள் தோல்விகளைத்தான் தோளில் போட்டுக் கொண்டு தொட்டதெல்லாம் மண்ணாகிவிட்டதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்கள் 6ஆம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் வாழ்வில் வசந்தத்தை அனுபவிக்கலாம்.

இந்த எண்ணில் பிறப்பது அதிர்ஷ்டம் வாய்ந்தது என்று சொல்லப்பட்டாலும், இவர்கள் இந்த எண்ணை கட்டுப் படுத்த வேண்டும். அதாவது அளவுக்கு மீறிய கோபதாபங்களும் ஆத்திரங்களும் இவர்களை ஆடவைக்க இடம் கொடுக்கக்கூடாது.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி மதுப்பிரியர்களாக இருப்பார்கள். இந்த எண்காரர்களில் சிலருக்கு இளமையி லேயே காதல் திருமணம் நடக்க வாய்ப்பிருக்கிறது. அப்படியே நடந்தாலும் அது கலாட்டா கல்யாணமாகவோ மதம் மாறிய கல்யாணமாகவோதான் இருக்கும்.

இந்த எண்காரர்களிடம் பேராசையும் அகம்பாவமும் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இந்த இரண்டும் இவர்களிடம் தலைவிரித்து ஆடுவதினால் இவர்களுக்கு சமுதாயத்தில் பல எதிர்ப்புகள் உருவாகும். இதனால்,

இவர்கள் தொட்ட காரியங்கள் எல்லாம் தோல்வியில் முடியக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கும். இப்படி ஒரு சூழ்நிலை உருவாகும்போது, ஆரம்ப நாட்களில் இவர்களைக் கண்டு பயந்து ஒதுங்கியவர்கள் எல்லாம் இவர்களிடம் வந்து மிரட்டிப் பார்ப்பார்கள். இதன் காரணமாக வாழ்க்கையின் அடித்தளத்திற்கே சென்றுவிடும் இவர்கள் தங்கள் தவறுகளை எல்லாம் நினைத்து நினைத்து மனம் உருகுவார்கள்.

இந்த எண்காரர்கள், ஆயுதங்களையோ வாகனங் களையோ பயன்படுத்துவதாக இருந்தால் மிகவும் விழிப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கையாளவேண்டும். இல்லையென்றால் பல விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இவர்களில் சிலருக்கு தேச சேவையில் நாட்டமிருந் தாலும் சாந்தி, சமாதானம் என்பனவற்றில் அவ்வளவு ஈடுபாடு இருக்காது. இவர்கள் நாட்டுக்காகத் தியாகம் செய்தாலும் தங்களது போராட்டக் குணத்தை நிறுத்தமாட்டார்கள். அதேநேரம் தோல்விகளையும் கண்டு கலங்க மாட்டார்கள்.

என்னதான் கஷ்டம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இவர்களிடம் நிறையவே உண்டு. சூதும் வாதும் நிறைந்தவர்கள் மத்தியில் தான் இவர்கள் வாழவேண்டிய சூழ்நிலை அமைந்திருக்கும். எதிலும் புதுப்புது யுக்திகள் தோன்றும். இவர்களிடம் சில அபூர்வ சக்திகளும் அமைந்திருப்பதுண்டு.

இவர்களுக்கு எவ்வளவுதான் கஷ்டமும் துன்பமும் வந்தாலும் அதை மற்றவர்களிடத்தில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். தெய்வம் என்ற ஒன்று உண்டு என்பதை நம்புவார்களே தவிர, கண்மூடித்தனமாக எதையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். எல்லோருடனும் மரியதையாக நடந்து அவர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகிக் கொள் வார்கள்.

இந்த எண்காரர்களில் சிலர் அதிக கல்வி அறிவில்லாமல் இருந்தாலும் உடல் வலிமையும் மன உறுதியுமுடைய வர்களாக இருப்பார்கள். எந்த விஷயத்திலும் அஞ்சாநெஞ்சம் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

இவர்களுக்கு உஷ்ண உடம்பு என்பதனால் இவர்கள் உணவில் வெங்காயத்தை நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும். முடிந்தவரைக்கும் மாமிச உணவு வகைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். எண்ணெய் குளியல் என்பது மிகமிக அவசியம்.


இந்த எண்காரர்களில் ஒரு சிலருக்கு தாம்பத்திய வாழ்க்கை சிறப்பாக அமையாது என்பது பொதுவான ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது. அதேபோல் சிலருக்கு குழந்தைகளும் குறைவாகத்தான் இருக்கும். இதற்கெல்லாம் இவர்களின் மனதில் 'ஈரம்' கொஞ்சம் குறைவாக இருப்பதுதான் காரணம்.

மற்றவர்கள் செய்த தீங்கை இவர்கள் எளிதில் மறந்துவிடமாட்டார்கள். வாய்ப்புக் கிடைக்கும்போது அவர்களுக்குப் பதிலடி கொடுக்கத் தயங்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி ! நாளும் மறவா நன்னன்றி!

எங்கள் குலவிருட்சம் என நின்று
குடும்பத்தை விளங்க வைத்த
அன்பு அன்னை
நாகமணி சிந்தாமணி
அவர்கள்
அந்தகாரப் பேரிருளில் அகப்பட்டு
அகம் நலிந்து நாம்வாட
விண்ணடைந்த அந்த நாளில்
ஓடோடி வந்து உறவு கலந்தோர்
உறவாகி நின்று உதவி தந்தோர்
பெருந்துயரிற் பங்கெடுத்த அன்பினர்கள்
பிரிவு நவிலும் பிரசுரங்கள் வெளியிட்டோர்
பத்திரிகை - தொலைபேசி - மலர்வளையம்
பற்பலவாய் அஞ்சலித்த பெரியோர்கள்
கல்வி சார் சமூக அன்பர்கள்
இன்றுவரை எமைப்புரந்த உரவோர்கள்
கிரியைகளைச் சிறப்புறச் செய்த குருமார்கள்
கலந்து சிறப்பிக்கும் தூயோர்கள்
மலராக்கம் - அமைப்பு நல்கும் நண்பர்கள்
மாண்புற அச்சமைக்கும் கரிகணன் அச்சகத்தார்
மற்றும்
உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள்
அனைவருக்கும்
நாளும் மறவா நல் நன்றி
நவில்கின்றோம்.



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—

Harikanan (Pvt.) Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org